
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போர்ட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/1187)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 21 வெள்ளிக்கிழமை (06.01.2012) பக்கங்கள் 16 ஓசை – 97




பாதாளக் குழுக்கள் பாவம்!

06



நாளை பிறந்தநாள் நினைவு

05



அமெரிக்கா குண்டு வீசும்!

13



தமிழர்களின் கதை?

11

## லலித், குகன் விவகாரம் இன்று யாழில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

கடந்த மனித உரிமைகள் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் காணாமல் போயிருந்த மக்கள் போராட்டக்குழுவின் உறுப்பினர்களான லலித், குகன் ஆகியோரின் விவகாரம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாரிடம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் காரியாலத்தில் இன்று விசாரணை நடைபெறவுள்ளது.

காணாமல் போன மக்கள் போராட்டக்குழுவின் உறுப்பினர் குகனின் மனைவி கொடுத்த வாக்கு மூலத்திற்கு அமையவே இவ்விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.காரியாலய இணைப்பாளர் ரி. கனகராஜ் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதற்கென அச்சுவேலி

(15ஆம் பக்கம் பார்க்க)

## மீள்பரிசீலனை கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

உயர்தர பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி ஜனவரி 17 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இதற்கான திகதியாக ஜனவரி 8 நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் உயர்தர

(15ஆம் பக்கம் பார்க்க)

## தஞ்சமடைந்த தமிழர்களை பிரித்தானியா கைவிடக்கூடாது

(கொழும்பு)



புலம்பெயர்ந்த தமிழர்களை திருப்பி அனுப்புவதை பிரித்தானியா மீள்பரிசீலனை செய்ய வேண்டும் பிரித்தானியாவில் தஞ்சமடைந்த தமிழர்களை பிரித்தானிய அரசு கைவிடக்கூடாது என்று யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்றுக்காலை பிரித்தானிய நாடாளுமன்ற

(15ஆம் பக்கம் பார்க்க)

## தீயில் எரிந்து இளம் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத்தானே தீ மூட்டி ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

துன்னாலை வடக்கு, கரந்தனைச் சேர்ந்த ராதா அருட்செல்வி (வயது-26) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த பெண் குடும்பப் பிணக்கு காரணமாக தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டியதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (பா, எப்.எஸ்)

# தெரிவுக்குழுவில் பங்குகொள்ளாவிடின் கூட்டமைப்புடன் பேச்சு இனி இல்லை

## அமைச்சரவையில் முடிவு



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக அரசு அமைக்கவிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றாத வரைக்கும் கூட்டமைப்புடன் அரசு பேச்சுக்களில் ஈடுபடக்கூடாது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நேற்று மாலை 4.30 மணியளவில் ஜனாதிபதி தலைமையில் அலரிமாளிகையில் அமைச்சரவை கூடியது.

இங்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அரசுடனான பேச்சுவார்த்தை கூட்டமைப்பு காலம் கடத்தும் உத்தியாகப்பயன்படுத்துவதாக அமைச்சரவை குற்றம் சாட்டியுள்ளது.

தெரிவுக்குழு அமைக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குள் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க விருப்பதாக அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது.

அரசுடனான பேச்சுவார்த்தை கூட்டமைப்பு காலங்கடத்தும் உத்தியாக பயன்படுத்துவதாக அமைச்சரவை குற்றம் சாட்டியுள்ளது.

தெரிவுக்குழு அமைக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குள் முன் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க விருப்பதாக அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது.

கூட்டமைப்பு தெரிவுக் குழுவுக்கு பெயர்ப்பட்டியலைச் சமர்ப்பிக்காமலும் பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு இணக்கத்துக்கு வராமல் முட்டுக் கட்டைகள் போட்டும் வருவதாக கூட்டமைப்பு மீது அரசு குற்றம் சுமத்தியுள்ளது. அரசு அமைக்கவிருக்கும் தெரிவுக்குழுவுக்கு தத்தமது கட்சியின் பெயர்ப்பட்டியலைத்

(15ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு இப்போது தென்னாபிரிக்காவில்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற தூதுக்குழு தென்னாபிரிக்காவுக்கு பயணமாகியுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் இக்குழு தென்னாபிரிக்காவின் தலைநகரான டர்பனுக்கு சென்றுள்ளது. தென்னாபிரிக்காவில் ஆளும் கட்சியான தென்னாபிரிக்க காங்கிரஸின் 100 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு

(15ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச விசாரணைகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைகளை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் வலியுறுத்தியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை வரவேற்கப்பட வேண்டியதென தெரிவித்துள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

முக்கியமான நிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தக்கூடாது என்ற யோசனை, தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற யோசனை உள்ளிட்ட பல காத்திரமான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற பரிந்துரை வரவேற்கப்பட வேண்டியதென தெரிவிக்கப்பட்டுள்ளது. இன சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் உண்மையைக் கண்டறியும்

(15ஆம் பக்கம் பார்க்க)

## தயாசிறி நீக்கம்

(கொழும்பு)

தயாசிறி ஜயசேகர உடன் அமுலுக்கு வரும் வகையில் எதிர்க்கட்சி பிரதி பிரதம கொறடா பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்நிலையில் அஜித்.பி.பெரேரா புதிய எதிர் கட்சி பிரதி கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## யாழ்.கல்வி நிலவரம் தகவல் திரட்டுகிறது ஜப்பான்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாவில் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக ஜப்பானிய பல்கலைக்கழகம் தகவல் திரட்டி வருகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அங்கவீனமுற்ற மாணவர்களுக்கும், மனநிலை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் கல்விச் செயற்பாட்டுக்கு வாய்ப்பும், வசதிகளும் ஏற்படுத்தித் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றும்,

(15ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியங்காட்டு தீ விபத்தில் காயமடைந்தவர் மரணம்

கல்வியங்காடு எரிபொருள் நிலையத்தில் நடந்த தீ விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கைதடி நாவற்குழி பகுதியைச் சேர்ந்த கே.மனோகரன் (வயது-62) என்பவரே சில தினங்களுக்கு முன்னர் குறித்த பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்தார். (எப்.எஸ்)

## கேட்டல் உபகரணம் மாணவர்களுக்கு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் கேட்டல் குறைபாடுடைய மற்றும் முற்றாக கேட்டல் திறன் அற்ற மாணவர்களுக்கு அதியுயர் தொழில்நுட்பத்துடன் கூடிய விலையுயர்ந்த கேட்டல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் இவ்வாறான மாணவர்களின் விபரங்களை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.கல்வி வலய அபிவிருத்திப் பிரிவிற்கு அனுப்பு வைக்குமாறு யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் அறிவித்துள்ளார்.

# தேவைகள் முழுமையாக நிறைவுசெய்யப்பட்டால் இளைஞர்கள் தீயவழியில் செல்வதை தடுக்கலாம்



(யாழ்ப்பாணம்)

இளைஞர், யுவதிகள் தீயவழியில் செல்வதைத் தடுத்து நிறுத்தி அவர்களை ஆற்றுப்படுத்தி அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து அவற்றை நிறைவு செய்வதன் மூலம் சமூக சீரழிவை நிறுத்தி ஆரோக்கிய சமூகத்தைக் கட்டிவளர்க்க முடியும் என்று ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தீவகம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கான தொழில் முயற்சி உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் சிறீ மோகனன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தீவகம் வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) சிறப்புரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தீவக பிரதேச மக்கள் எங்களது கொள்கைகள் செயற்பாடுகளை ஏற்று எம்மோடு தோள் கொடுத்து செயற்படுவதனூடாக தீவக பிரதேசம் பல விதமான அபிவிருத்திகளை பெற்று வருகின்றது. மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திகளைப்போல தீவகத்திலும் அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றோம்.

தீவக பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதிலும் தன்னுடைய காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அயராது பாடுபட்டு வருகின்றார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களான எமக்கு ஒதுக்கப்படுகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் பிரதேச அபிவிருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். இதன் ஒரு கட்டமாக விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களையும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான தொழில் முயற்சி உபகரணங்களையும் வழங்கி வருகின்றோம்.

யுத்தத்தின் தாக்கத்தால் மன உளைச்சலுக்குள்ளான இளைஞர், யுவதிகளுக்கான மன ஆற்றுப்படுத்தும் வகையில் விளையாட்டுக் கழகங்களை ஊக்குவித்து வருகின்றோம். இதனூடாக இளைஞர், யுவதிகள் தீய வழியில் செல்வதை கட்டுப்படுத்த முடியும்.

அதற்கேற்ப யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுக் கழகங்களுக்கான தேவைகளை கேட்டறிந்து நிறைவேற்றுவதற்கான விசேட கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துரைகளை ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் ஊர்காவற்றுறை பிரதேச அமைப்பாளருமான ஜெயகாந்தன் ஆகியோர் நிகழ்த்தினார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட 13 விளையாட்டுக் கழகங்களுக்கு தலா 25000 ரூபா வீதம் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும், நாரந்தனை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 50 ஆயிரம் பெறுமதியான தையல் இயந்திரங்களும் இந்த வைபவத்தில் வழங்கப்பட்டது.

## சந்தேகநபர்கள் இருவர் கைது

(கரணவாய்)

நகைக் கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்தேக நபர்கள் இருவர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது யாழ்ப்பாணத்தில் களவாடப்பட்ட தங்க நகைகள் பிடிபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதைவிட இவர்களுக்கு உடந்தையாக இருந்த கரணவாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். (18)

## கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப. 2.00 மணிக்கு புலோலி மெ.மி.த.க பாடசாலை ஆசிரிய வள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர்கள் தங்கள் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் மேலதிக ஆசிரியர்களின் விபரங்களை பாட ரீதியாகவும், வயது ரீதியாகவும் கொண்டுவருதல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் 09.01.2012 திங்கட்கிழமை, 11.01.2012 புதன்கிழமை மற்றும் 13.01.2012 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

10.01.2012 செவ்வாய்க்கிழமை 12.01.2012 வியாழக்கிழமை மற்றும் 14.01.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# 'முழு நிலா முத்து' மாபெரும் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

முழு நிலா முத்து என்ற வட மாகாண கல்வித் திணைக்களம் வழங்கும் பௌர்ணமி நாள் கலைவிழா நிகழ்வு நாளைமறுதினம் காலை 10.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலைவிழா நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகவும், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் வடமாகாண பாடசாலை மாணவர்களின் தமிழ் கலாசார நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## நுளம்பு பெருகினால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் நுளம்பு பெருகக்கூடிய வகையில் செயற்பட்ட வீட்டு உரிமையாளருக்கு யாழ். நீதிமன்றத்தால் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தப்பட்டார். (பா)


சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த திருவாசக விழா - 2011

காலம்:
இன்று 06.01.2012 வெள்ளிக்கிழமை
காலை 9.30 மணியளவில்

இடம்:
சந்நிதியான் ஆச்சிரமம்

ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

சிறப்புச் சொற்பொழிவு:
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்

வாராந்த வெள்ளி நிகழ்வு
மறவனூர் T.M.வாசகர் குழுவினரின் மங்கள இசை

(C/1189)

குறிப்பு: ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும் திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக எடுத்து வரப்படும். அறுபத்துமூவர் குருபூசையும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சந்நிதியான் ஆச்சிரமம்
செல்வச் சந்நிதி,
தொண்டமானாறு.

பேரவை



## சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1186)





சகல பரிகாரங்களுக்கும் மலையாள மாந்திரிகம்.

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. ஜாதக கணிப்பை ஆணி வேர் அக்கு வேராக கணித்து தெரிந்த பின்பே மலையாள மாந்திரிக சக்தி அவர் அவருக்கு ஏற்ற உச்சாடனம் செய்யப்படுகின்றது. கல்விஞான சித்தம் கிட்ட மட்டும் 9 மாதத்துக்கு முன்பே பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். அதி விஷேடமாக வெளிநாட்டவருக்கு என அவர்கள் எண்ணங்கள் நிறைவேறும் வண்ணம் வியாழக்கிழமை தோறும் இங்கு மாந்திரிக உச்சாடனங்கள் செய்யப்படுகின்றன. உள்நாட்டவருக்கென இம்மாதக்கடைசியில் வரும் திகதியில் காலை 09 மணி முதல் மாலை 05 மணிவரை அக்கினி குண்டல யாக பூஜைகள் நடைபெறும். இங்கு தீய வேலைக்கு இடமில்லை. இரகசியம் பேணப்படும். எம்மதத்தினருக்கும் சேவை உண்டு. சகல குறைகளுக்கும் முன் அறிவித்தலுடன் நேரத்தை ஒதுக்கி வந்து மட்டுமே என்னை சந்திக்கலாம்!

தேசபந்து, பேராசிரியர், துர்க்கைதாசன் கலாநிதி P.K. சாமி J.P ஐயா!

அருள்ஞான சித்த இல்லம். ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்.
23. மேபீல்ட் ரோட் கொழும்பு - 13. தொ.பே: 011 2342463. 011 2342464. 011 2470615
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம் 052-2222508

(C/1185)



## தொழிற் பயிற்சிகள்

வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் தொழில்நுட்பத் துறையில் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கேற்றவாறு பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

- Mobile Phone Repairing
- Soft ware, Hard ware — காலம் : 3 மாதம்
- றேடியோ, ரெலிவிசன், DVD Repairing சகல இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும் — காலம் : 10 மாதம்
- எலக்றிக்கல் வயறிங்
  வீட்டு மின்சுற்று, மின்சாரப் பொருள்கள் திருத்துதல் பயிற்சிளிக்கப்படும் — காலம் : 3 மாதம்
- றிவைண்டிங்
  மின்மோட்டார், ரான்ஸ்போமர் வைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும் — காலம் : 5 மாதம்
- ஏயர் கொண்டிசனிங்
  ஏயர் கொண்டிசனிங் திருத்துதல், சேவிஸ் செய்தல், பொருத்துதல் பயிற்சியளிக்கப்படும் — காலம் : 6மாதம்

சகல பயிற்சிகளும் சனி, ஞாயிறு நடைபெறும்

## Sinhala Class

அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கு சிங்களம் எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.

ஆசிரியர் : சூரி

வகுப்புக்கள் ஆரம்பம் : 14.01.2012 சனி, 09.01.2012 திங்கள்

விபரங்களுக்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P: 0778249949

கிளை : New Asian Center
56/15 B, ஸ்ரான்லி வீதி, (சம்பத் வங்கியருகில்) யாழ்ப்பாணம். T.P:0779254078

குறிப்பு: வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

(C/1188)

உன் அழகு, உன் வறுமை, உன் ஆற்றல், உன்செல்வம், உன் பதவி அனைத்தும் உன்னைக் கர்வம் கொண்டவனாக்கி விடக்கூடாது. வயது ஏற ஏற இவையாவும் முதுமையில் மறையும். எனவே இந்தத் தோல்வியை வைத்து கர்வப்பட என்ன இருக்கிறது.

-ஸ்ரீ சத்திய சாயிபாபா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## தொடர்பு சாதனங்களின் யுத்தம்!

இன்றைய தினத்தில் உலக மாந்தர் அனைவரினதும் வாழ்வைப் பயமுறுத்திக் கொண்டிருப்பது எது என்று கேட்டால், அனுவாயுத உற்பத்தி, இன – மத – தேச நம்பிக்கைகளுக்காக ஒருவரையொருவர் கொன்றுவிடத் துடிக்கும் மனோபாவம், மாசடையும் சுற்றுச் சூழல், பூகோள வெப்பமாதல் என்று பல்வேறு பதில்களையும் சொல்வோம்.

ஆனால், இவற்றையும்விட இன்னொரு பயங்கரம்தான் மிகவும் பயப்பட வேண்டியதாக இருக்கிறது என்கிறார்கள் இன்றைய மானிடவியல் அறிஞர்கள். இத்தருணத்தில் நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருப்பது over communication என்பதுதான் என்கிறார்கள். அதாவது, உலகின் ஒரு புள்ளியில் இருந்துகொண்டு உலகின் மற்றெல்லாப் பகுதிகளிலும் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிற குணம்தான்.

மக்களை வெளிப்படையாக ஒடுக்குமுறைக்குட்படுத்துகிற கருவிகளை நாமறிவோம். பொலிஸ், ராணுவம், சட்டம், சிறைச்சாலை போன்றன கண்காணிப்பையும் ஒடுக்குதலையும் நேரடியாகவே நிகழ்த்துகின்றன. அதேசமயம் மறைமுகமான ஒடுக்குமுறைச் சாதனங்களாக மதம், கல்வி, குடும்பம், தொடர்புச் சாதனங்கள் போன்றவற்றைச் சொல்கிறார்கள்.

நேரடியான ஒடுக்குமுறையை நியாயப்படுத்துவது மட்டுமல்லாமல், தாம் செலுத்துகிற வன்முறை வெளியே தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்த மறைமுகமான ஒடுக்குமுறைக் கருவிகளே மிகுந்த அபாயத்தை உண்டுபண்ணக் கூடியனவாய் உள்ளன என்கிறார்கள்.

மதம், கல்வி, குடும்பம், தொடர்புச் சாதனங்கள் போன்ற இந்த மறைமுக ஒடுக்குதல் சாதனங்களினுள்ளும் மக்கள் தங்களைத் தாங்களே சீரழித்துக் கொள்ளும் வகையிலான கருத்துக்களை விழுங்க வைத்துக் கெடுதி செய்யும் சாத்தியங்களை அதிகம் கொண்டிருப்பவை தொடர்புச் சாதனங்களே எனப்படுகிறது.

குடும்பம், கல்வி, மதம் போன்றவற்றிலிருந்து தம்மை விலக்கித் துண்டித்துக் கொள்ள முடிகிறவர்களும் கூட தொடர்புச் சாதனங்களிடமிருந்து தம்மைத் துண்டித்துக்கொள்ள முடிவதில்லை. செய்திகளுக்கும், பொழுதுபோக்கு கேளிக்கைக்குமென்பதாக முன்வைக்கப்படுகிற இச்சாதனங்கள் மற்ற எவற்றையும் விட வலிமை வாய்ந்தனவாய் நம்மை ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

என்ன சாப்பிடுவது, எதை உடுத்துவது, எந்த சோப், பற்பசை, சருமப்பசைகளைப் பயன்படுத்துவது, வாங்க வேண்டிய மின்சாதனங்கள் என்று அவையே நமக்குச் சொல்லித் தருகின்றன. தினந்தோறும் கொலை, கடத்தல், கொள்ளை, வல்லுறவு என்று பல்வேறு விதமாகத் தகவல்கள் நமக்குள் சேகரமாகின்றன. நம் மனங்களை வன்முறைக் கிட்டங்கிகளாகவும், நுகர்வுப் பைத்தியமாகவும், ஆதிக்கப் பிரிவினரின் கருத்தியலுக்குத் தாளங்களாகவும் ஆக்கிவிடுகின்றன.

இந்தத் தொடர்புச் சாதனங்கள் மூலமான கருத்தியல் ஆயுதத்தையே, சமூகத்தின் உற்பத்தி சக்திகளது உரிமையாளர்கள் மக்கள் மீது மேலாண்மை செய்யப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தொடர்புச் சாதன ஆதிக்கத்தைக் கொண்டிருப்பவர்கள் இந்த சாதனங்களையே இராணுவத்துக்குப் பதிலீடாகவும் ஆக்கிக் கொண்டுவிட முடிகிறது. உதாரணத்திற்கு, ஈராக் யுத்தம் குண்டுவீச்சு தொடங்குவதற்கு முன்பே பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளிலும் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டுகிறார்கள்.

வியட்நாம் யுத்தத்தின் போது போருக்கெதிராக அமெரிக்காவில் மக்கள் திரண்டதைப் போல ஈராக் யுத்தத்தின் போது நடக்கவில்லை. முன்பு மக்களைத் திரட்டி வீதிக்கு இறக்கியதில் பத்திரிகைகளுக்குப் பெரும் பங்கிருந்ததைத் தெரிந்துகொண்டிருந்த அமெரிக்கா, இம்முறை ஊடகங்களில் கவனமெடுத்துக் கொண்டது.

ஈராக் யுத்தத்தை நடத்தி முடித்த அமெரிக்கத் தளபதிகளில் ஒருவர் சொன்னார்: "வியட்நாம் யுத்தத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம் இதுதான். யுத்தத்தில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பவை துப்பாக்கிகளும் வெடிகுண்டுகளும் மட்டுமில்லை, பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் கூடத்தான்..."

அரசியல்வாதிகளை விடவும், மதத் தலைவர்களை விடவும் அதிக பொறுப்புணர்வு இன்று ஊடகங்களைக் கையாள்பவர்களுக்கே தேவைப்படுகிறது.

– ஆசிரியர்

# அடிப்படை வளங்கள் அற்றநிலையிலேயே சிறந்த பெறுபேற்றை பெற்றுச் சாதனை

## விபுலானந்தாக்கல்லூரி அதிபர் வே.இந்திரன்

கடந்த ஆண்டு இடம்பெற்ற உயர்தரப் பரீட்சைப் யில் கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும் மருத்துவத்துறைக்கு 3 மாணவர்களையும் பொறியியல் துறைக்கு ஒரு மாணவனையும் எமது பாடசாலையால் பெறமுடிந்துள்ளது. அது எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் பெறப்பட்ட பெறுபேற்றுச் சாதனையாகவே கருதுகின்றேன் என வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் அதிபர் வேலுப்பிள்ளை இந்திரன் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் கலைத்துறையில் முதலாம் இடத்தினைப் பெற்றமை தொடர்பாகவும் முதல் தடவையாக மருத்துவத் துறைக்கு 3 மாணவர்கள் ஒரேதடவையில் சித்தி பெற்றமை தொடர்பாகவும் எமது செய்தியாளர் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

2001 ஆம் ஆண்டில் இருந்து 6 தடவைகள் கலைத்துறையில் மாவட்டத்தில் முதல் நிலைப் பெறுபேற்றைப்பெற்று வருகின்றோம். இம்முறை கிடைக்கப்பெற்ற முதல்நிலை பெறுபேற்றில் சிறப்பம்சமாக குறிப்பிடவேண்டியது அகில இலங்கை ரீதியில் 8 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளமையாகும். அதேபோல் மாவட்ட மட்டத்தில் இரண்டாவது இடத்தினையும் எமது கல்லூரியே பெற்றுள்ளது. அத்துடன் விஞ்ஞானத்துறை 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து ஒவ்வொருவர் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இம்முறை விசேடமாக 3 பேர் மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் 8 பேர் மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்படும் நிலையில் 3 பேர் எமது கல்லூரியில் இருந்து தெரிவு செய்யப்படுவதென்பது சிறப்பாகக் கருதுகின்றேன்.

ஏனெனில் ஆய்வு கூட வசதிகளோ, போதுமான ஆசிரியர்களோ குறிப்பாக இரசாயனவியலுக்கு ஆசிரியரே அற்ற நிலையில், வளங்கள் இன்றி இவ்வாறான அடைவு மட்டமானது வவுனியா மாவட்டத்தில் எமது பாடசாலை அடைந்த சாதனையாகக் கருதுகின்றேன்.

இம்முறை விஞ்ஞானப்பிரிவில் 90 வீதமானவர்களும், கலைத்துறையில் 95 வீதமானவர்களும் வர்த்தகத்துறையில் 75 வீதமானவர்களும் பல்கலைக்கழக தகுதியுடன் சித்தியடைந்துள்ளனர். அந்தவகையில் 4 பிரிவுகளையும் பொறுத்தவரையில் 45 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புகள் பெற்றுள்ளனர். அடிப்படை வசதிகள் அற்றநிலையில் இவ்வாறான பெறுபெறுகளை மாணவர்கள் பெற்றது மாத்திரமன்றிச் சித்தியடைந்த அனைத்து மாணவர்களும் வறுமையான நிலையில் உள்ளவர்கள் .

சில விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. அதாவது வேறு பாடசாலைகளில் கற்ற மாணவர்களும் எமது பாடசாலையில் உயர்தர வகுப்பில் இணைய வேண்டும் என்ற அவாவில் வந்து இணைந்திருந்தனர். அவர்கள் சித்தியும் பெற்றுள்ளமை மகிழ்ச்சியான விடயமாகும். என்றார். (125)

## மீள்குடியேறிய மாணவர்களுக்கு புத்தகப் பைகள் அன்பளிப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கு புளியங்குளம் பகுதியில் மீள்குடியேறிய நிலையில் பாடசாலைக் கல்வியை தொடரும் மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு புளியங்குளம் தனிநாயகம் அடிகளார் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சமூகசேவையாளரும் வர்த்தகருமான அல்காஜ் எஸ். கே. காதரின் நிதியுதவியில் 45 மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கப்பட்டிருந்தன.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மஸ்தான் நிறுவனத்தின் புளியங்குளம் முகாமையாளர் எஸ்.சுபாநாதன், சமூகசேவையாளர்கள் எஸ். ஞானப்பிரகாசம் மற்றும் அமிர்தலிங்கம், மனித உரிமைகள் இல்லத்தின் இணைப்பாளரும் ஊடகவியலாளருமான ந. கபிலநாத், புளியங்குளம் கிராமப் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (125)

## நிலையங்கள் திறக்கப்படும்

(குருநகர்)

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்குரிய விடுமுறையை ரத்துச் செய்துள்ளதாக அதன தலைவர். அ. அல்பேட் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் வழமைபோல் நிலையங்கள் திறந்து வைக்கப்படுமெனத் தெரிவித்த அவர், தைப்பொங்கல் தினமான 15ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நிலையங்களை மூடி விடுமுறை அனுஷ்டிக்கப்படுமென்றும் மேலும் அறிவித்துள்ளார். (68)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகளை இறக்கிய சாரதிக்கு அபராதம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியின் விதிமுறைகளை மீறிய இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் சாரதிக்கு அபராதம் விதிக கப்பட்டுள்ளது.

அதிவேக வீதியின் இடையே இரண்டு பயணிகளை இறக்கியமையினால் பஸ் சாரதிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

தெற்கு அதிவேக வீதியில் பயணிக்கும் எந்தவொரு வாகனத்திற்கும் இடைநடுவே நிறுத்துவதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

மஹரகமவிலிருந்து காலி நோக்கிப் பயணித்த பஸ்ஸில் இருந்த இரண்டு பயணிகளையும் சட்டவிரோதமாக குருதுகஹஹெதெப்ம நுழைவாயிலுக்கு அருகில் பஸ் சாரதி இறக்கிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் பிரகாரம் குறித்த பஸ் பின்னதுவ நுழைவாயிலில் இருந்து வெளியேறும் சந்தர்ப்பத்தில், சாரதிக்கு அபராதம் விதிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தெற்கு அதிவேக வீதிக்குள் பிரவேசித்த ஆடு ஒன்றின் உரிமையாளருக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது

## கூட்டம்

வேலணைப் பிரதேச செயலகத்தில் ஐ.எல்.டி.பி. தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் வேலணைப் பிரதேச சபையின் தலைவர் சி.சிவராசா யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபை செயலாளர், வேலணைப் பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## அபிவிருத்திப்பாதையில் செல்லும்போது சேவையாளர்களின் பிரிவு அவசியமற்றது

(கொழும்பு)

அபிவிருத்தி பாதையில் செல்லும் போது சேவையாளர்களிடையிலான பிரிவு அவசியமற்றது என்று துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடு அபிவிருத்திப் பாதையில் செல்லும் போது மக்கள் அனைவரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம்.

இந்த நிலையில், சேவையாளர்கள் தமக்குடனாக விரோதங்களை முன்னிலைப்படுத்தி, பிரிவுபடுவது சிறந்ததாக அமையாது.

இந்த நிலையில், எவ்வாறன தடைகள் வந்தாலும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களானது ஒருபோதும் கைவிடப்பட மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மகிந்தபுரம் குடியிருப்பாளர்களின் தேவைகள் குறித்து கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ். நாவற்குழி மகிந்தபுரம் வீட்டுத்திட்ட குடியிருப்பாளர்களது தேவைகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று கடந்த திங்கட்கிழமை மாலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

அமைச்சர் அவர்களது யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலின்போது அப்பகுதியில் விளையாட்டு மைதானம், குடிநீர் வசதி பொதுச் சந்தை ஆரம்ப சுகாதார நிலையம் போன்ற விடயங்கள் தொடரபில் கலந்துரை யாடப்பட்டது.

இதற்கிணங்க மேற்படி உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களை வரையும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேநேரம் நாவற்குழி மகிந்தபுரம், ஐந்து வீட்டுப் பகுதி மற்றும் ஐயனார் கோயில் பகுதிபோன்ற இடங்களுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் குடிநீர் மற்றும் வடிகாலமைப்பு அதிகார சபையிடம் திட்ட மதிப்பீடு ஒன்றை அமைச்சர் கோரியுள்ளார். இத்திட்ட மதிப்பீடு கிடைத்ததன் பின்னர் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும்.

இக்கலந்துரையாடலின் போது சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மகிந்தபுர குடியிருப்பின் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கோப்பாய் மத்தி கிளுவானை வீதி புனரமைப்புப் பணிகள் இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தி கிளுவானை வீதியின் புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதால் போக்குவரத்துக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படடுள்ளது.

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட இவ்வீதி நெல்சிப் திட்டத்தினால் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தது.

இவ் வீதிப் புனரமைப்பு நிறுதப்பட்டமைக்கான காரணம் போதியளவு கற்கள் இல்லாமலாகும் என ஒப்பந் தக்காரர்களால் தெரிவிக்கப்படு கிறது.

புனரமைப்புப் பணிகள் நிறுத்தப்பட்ட வீதிப் பகுதிகளை வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளர் சோமராஜ் ஜெயந்தன், எதிர்க்கட்சி உறுப்பினர் இ.ஜங்கரன், தவிசாளர் அன்ரு உதயகுமார் ஆகியோர் நேற்று அப்பகுதிக்கு விஜயம் செய்து பார்வையிட்டனர்.

இதேவேளை திருத்தப்பட்ட வீதிப் புனரமைப்புப் பணிகளும திருப்தி கரமானதாக இல்லை என பொதுமக்கள் சுட்டிககாட்டுகின்றனர்.

இவ்வீதிப் புனரமைப்புப் பணிகள் அமைச் சர்களான பசில் ராஜபக்ஷ மற்றும் கே. என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறிப்பிடத் தக்கது.

(135)

# தட்டுவன்கொட்டி கிராமத்திற்கு பாலம் அமைக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் தட்டுவன்கொட்டி கிராமத்தில் பாலம் ஒன்று அவசியம் அமைக்கப்படவேண்டும் என கண்டாவளை பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இக்கிராமத்திற்கான பிரதான போக்குவரத்துப் பாதையில் மழை காலங்களில் பயணிக்க முடியாதுள்ளது. பொது மக்கள் நாளாந்தம் பல்வேறு சிரமங்களின் மத்தியில் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இக்கிராமத்துக்கென குறித்த பாதை மட்டுமே தரைவழிப் பாதையாக காணப்படுகிறது. தற்போது இப்பாதையும் குண்டும் குழியுமாக மிகமோசமாக சேதமடைந்து காணப்படுவதுடன் வெள்ளநீர் தேங்கி சேறும் சகதியுமாக காணப்படுவதால் போக்குவரத்துக்கள் சிரமத்துடனேயே இடம்பெறுகிறது.

இக்கிராம மக்களின் போக்குவரத்தினை இலகுபடுத்தும் வகையில் இங்கு பாலம் ஒன்று அமைக்கப்படவேண்டும். இப் பாலம் அமைப்பதன் மூலமே இலகுவாக போக்கு வரத்து இடம்பெறும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இம்முறை பெய்த கடும் மழையினால் இக் கிராமத்தில் படகுசேவை மேற்கொள்ளப்பட்டதாகவும் இவற்றினுடாகவே மக்கள் தமது பயணத்தைத் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(கே)

# அவுஸ்ரேலிய மருத்துவர்களால் மருதங்கேணியில் நடமாடும் சேவை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அவுஸ்ரேலியாவில் இருந்து வருகைதந்த வைத்திய குழுவினால் இலவச நடமாடும் சேவை ஒன்று இடம்பெற்றது. நேற்று முன்தினம புதன்கிழமை காலை 9மணி தொடக்கம் 4 மணிவரை தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாள்ர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் தலைமை யில் இச் சேவை இடம் பெற்றது.

இதில் அவுஸரேலியாவில் இருந்து 13 வைத்தியர்கள் அடங்கிய குழுவினர் உட்பட பருத்தித்துறை சுகாதார பணிமனையின் வைத்திய அதிகாரி டாக்டர் ஜி. செந்தூரன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மந்திகை ஆதூர வைத்தியசாலை, வைத்திய அதிகாரிகள் உட்பட வடமராட்சி கிழக்கு இராணுவ அதிகாரிகள். மருதங்கேணி கோட்ட கல்விப் பணிப்பாளர் க.பொனனையா, தாளையடி பாடசாலை அதிபர் என். கண்ணதாசன் சுகாதாரவைத்திய பரிசோதகர்கள் தாதியர்கள் என் பவர்களுடன் பொது மக்கள மற்றும் நோயாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் இரத்தப்பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை உட்பட ஆய்வு கூட பரிசோதனைகளும், குழந்தைகளுக்கான வைத்தியம் பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை, இருதய நோய்களுக்கான சிகிச்சையும் மேலதிக சிகிச்சைக்கான கொழும்புக்கான ஏற்பாடுகளும், வழங்கப்பட்டதுடன் சத்துணவுகளும் ஒரு மாத காலத்துக்கு தேவையான இலவச மருந்துகள், கண் சிகிச்சை உட்பட கண்ணாடிகள் பெறுவதற்கான ஆலோசனை என்பனவும் வழங்கப்பட்டது. மேலும் பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன் இச் சேவையில் 300க்கு மேற்பட்ட நோயாளிகள் பயன் பெற்றனர்.

(116)

# அபராதம்

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் வாகன வழிதட அனுமதிப்பத்திரம் இன்றி பயணம் செய்த வாகனச் சாரதிக்கு யாழ். நீதிமன்றம் ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபரை யாழ் போக்குவரத்து பிரிவு பொலிஸார் கைது செய்து யாழ். மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தினர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் மா.கணேசராசா குறித்த நபருக்கு ஆயிரம் ரூபா அபராதத்தை செலுத்துமாறு தீர்ப் பளித்தார். (பா)

# செய்தியில் திருத்தம்

கடந்த 31.12.2011 அன்று தினமுரசு நாளிதழில் “சந்தைக்குத்தகையில் முறைகேடு, பருத்தித்துறை நகரசபைக்கு எதிராக கண்டனம்” என 4ஆம் பக்கத்திலும், “ கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே பருத்தித்துறை நகர சபையில் முரண்பாடு சமரசம் செய்தனர் எதிர்க்கட்சியினர் என 16ஆம் பக்கத்திலும் வெளிவந்த செய்திகள் பருத்தித்துறை பிரதேச சபைக்குரியவை. தவறுதலாக அவை பருத்தித்துறை நகர சபை என பிரசுரமாகிவிட்டன.

எனவே இந்த மாற்றம் காரணமாக ஏற்பட்ட மன உளைச்சல்களுக்கு வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

# ஒப்படைக்கவும்

மாவை கலட்டி தெல்லிப்பளை எனும் முகவரியைச் சேர்ந்த ஆறுமுகம் ராஜ்மோகன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (890302440V) தெல்லிப்பளை வைத்திய சாலைக்கு இடையில் தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் வலி வடக்கு ஜே/225 கிராம அலுவலரிடம் ஒப்படைக்கவும்.

# கிளிநொச்சியில் இந்திய அரசின் நிதியில் 250 வீடுகள் நிர்மாணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் 250வீடுகள் அமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இத்தகவலை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 89 வீடுகளும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 61 வீடுகளும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளுமாக மொத்தம் 250 வீடுகள் அமைக்கப்பட்டுவருகிறது.

இதில் 85 வீடுகள் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 30 வீடுகளுக்கு இதுவரை கட்டுமாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

# துரித கற்றல் செயற்திட்ட மீளாய்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் செயற்திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள. யுத்தத்தினால் உரிய வயதுக் குரிய கல்வியை இழந்து பிள்ளைகளுக்கான துரித கற்றல் செயற்திட்டம் (ALP தொடரபான மீளாய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.


யாழ். வலயக் கல்விப் பணிப ்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இச் செயற்திட்ட மீளாய்வுக் கூட்டத்தில், 2012 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டம் தொடர்பாக ஆராயப்பட்டது.

கடந்த வருடம் யுனிசெவ் இன் நிதி அனுசரணையுடன் யாழ் வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 பாடசாலைகளில் யுனிசெவ் திட்ட பொறுப்பாளர் எஸ்.இரட்ணசிங்கத்தின் பொறுப்பில் நடைமுறைப்படுததப்பட் டது.

தொடர்ந்து 2012 ஆம் ஆண்டு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி செயற்படுத்துவதற்காகவே இக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் வடமாகாண கல்விக்கு பொறுப்பான உத்தியோகத்தர் எஸ்.வலதசீலன், ஆசிரிய ஆலோசகர்கள், வழிகாட்டலுக்கும் ஆலோசனைகளும் பொறுப்பான உத்தியோ கத்தர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல் விப் பணிப்பாளர்கள், ஆகியோர் கலந்துகொண்டனர்.

(136)



வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வில் முன்னாள் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மங்கள விளக்கேற்றுவதையும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவிகளின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் நிகழ்வையும் காணலாம். (116)

# குடாநாட்டில் கண்ணிவெடி அபாயம் முற்றாக நீங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

2011ஜனவரி முதல் டிசெம்பர் 22ஆம் திகதி வரை 731பொதுமக்கள் கண்ணிவெடிகளால் பாதிக கப்பட்டதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற் பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது. யாழ். மாவட்டத்தில் 2011டிசம்பர் 22ஆம் திகதிவரை கண்ணிவெடிகள் இனம்காணப்பட்ட பகுதிகளில் 87.13 வீதமான பகுதியில் கண்ணிவெடிகள் அகற் றப்பட்டுள்ளன.

எஞ்சிய 42 இனங்காணப்பட்ட இடங்களில் 25 இடங்கள் (1869,428 சதுர மீற்றர், தற்போது கண்ணிவெடிகள் அகற்றும் பணி இடம்பெற்று வருவதாகவும், 17 இடங்கள் (3908898 சதுர மீற்றர்) எதிர்காலத்தில் அகற்றவேண்டி இருப்ப தாகவும் யாழ். மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மேலும் கண்ணிவெடி புதைக்கப் பட்டிருக்கும் பகுதிகள் புதிதாக இனம் காணப் படும் சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப் படுவதாகவும், இவ்வாறு இருக்கும் பட்சத்தில் கண்ணிவெடி அகற்றப்படவேண்டிய பிரதேசம் அதிகரிக்கும் எனவும் மாவட்ட மிதிவெடி செயற் பாட்டு நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்சமயம் மனித நேயக் கண்ணிவெடியகற் றும் நடவடிக்கையில் டெனிஸ், கலோரஸ்ற் , இராணுவக் கண்ணிவெடியகற்றும் பிரிவு, டாஸ் போன்று நிறுவனங்கள் ஈடுபட்டுவருகின்றன. இந்தப் பகுதியில் 113236 கண்ணிவெடிகள் கண்டு எடுக்கப்பட்டுள்ளதுடன், வாகனங்கள் மற்றும் பாரிய வெடிபொருட்கள் 255 மீட்கப்பட்டுள்ள தாகவும், வெடிக்காத ஏனையபொருட்கள் 103, 930 கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடிச்செயற்பாட்டு அலுவலகம் குறிப் பிட்டுள்ளது. (பா)



சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான நவீன குளியலறைகள் இர்ண்டு எஸ்.வி.முருகேசு வர்த்தக நிறுவனத்தினரின் நிதி நன்கொடையில் புதிதாக அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.இந்நிகழ்வில் நிறுவனத்தின் முகாமையாளர் சேகர் கட்டடத்தை நாடவெட்டி திறந்து வைப்பதை யும் அருகில் வாழ்வக தலைவர் உட்பட விருந்தினர்கள் நிற்பதை யும் காணலாம்.

# தங்கம்மா அப்பாக்குட்டியின் 87ஆவது பிறந்ததின நிகழ்வு



(தெல்லிப்பளை)

சிவத்தமிழ் செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 87ஆவது பிறந்த தினம் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலா நிதி ஆறு. திருமுருகன் தலைமையில் ஆலயத் தின் அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உடற்கூற்றியல் துறைத்தலைவர் செல்வி சகுந்தலாதேவி அம்பிகைபாகன், சிறப்புவிருந்தினர்களாக வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனாவைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி க. உமாபதி, துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


இவ்விழாவின் போது, இவ்வருடம் "சிவத்ததமிழ் விருது" சான்றோர்களான இளைப்பாறிய அதிபர் மூதறிஞர் சரவணபவன் (சிற்பி), இளைப்பாறிய சுகாதாரப்பரிசோதகர் பொ. செல்லப்பா, சைவசமயப்பெராணிகர் பண்டிதை திருமதி பா.சிவபாக்கியம், மூத்த புகைப்படக்கலைஞர் லேஹவுஸ் எஸ்.கதிரவேலு, சிற்பக்கலைஞர் ஏ.வி. ஆனந்தன் ஆகியோருக்கு வழங்கிக்கௌரவிக்கப்படவுள்ளது.

# பாதை அடைப்பால் பயணிகள் அசௌகரியம்

(கரணவாய்)

அந்திரான் மீள் எழுச்சிக் கிராமத்தினூடாகச் செல்லும் மக்களின் பாவனையில் உள்ள பாதை ஒன்று அண்மையில் அடைக்கப் பட்டுள்ளதால், அவர்கள் யாழ். பருத்தித்துறை பிரதான வீதியைச் சென்றடைவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின் றனர்.அத்தோடு, இப்பாதை அடைக்கப்பட்டுள்ளதனால் பாடசாலை கள் மற்றும் கோவில்களுக்குச் செல்வோர் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை அந்திரான் மீள் எழுச்சிக்கிராம மக்கள் மட்டுமன்றி, அயல் பகுதிகளான நொத்தரின் தோட்டம் மற்றும் கல்துவப் பகுதி மக்களும் இப்பாதை அடைப்பினால் பாதிப்படைந் துள்ளதாகவும் எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (18)



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜே.89 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ரூபா 50ஆயிரம் பெறுமதியான அலுமாரி மற்றும் தளபாடங்கள் வழங்கப்பட்டன. இப்பொருட்களை ஈ.பி.டி.பி.நல்லூர் பிரதேச அமைப்பாளரும் எதிர்க்கட்சித்தலைவருமான அ.இரவீந்திரதாசன் மற்றும் நல்லூர் உதவி பிரதேச செயலர் உதவி திட்டப்பணிப்பாளர் ஆகியோர் மாதர்அபிவிருத்திச்சங்கத்திடம் கையளிப்பதைக் காணலாம்.(26)

# நீண்டவரிசையில் காத்து நின்றே வரிச்சான்றிதழைப் பெறும்நிலை

## - பொதுமக்கள் விசனம்

(அச்சுவேலி

யாழ்ப்பாண மாவட்டத்தி லுள்ள பிரதேச செயலகங்களில் வாகன வரிச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்காக பொது மக்கள் காலை வேளையிலேயே நீண்டவரிசையில் காத்திருப் பதைக் காணக்கூடியதாக உள் ளது.

வீதிகளில் போக்குவரத்துக் கண்காணிப்பு பொலிஸாரின் கண காணிப்பு நடவடிக்கைகள் இறுக் கமாகக்காணப்படுகின்றமையால் வரிப்பத்திரங்களைப் பெற் றுக்கொள்வதற்காக தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் பிர தேச செயலகங்களுக்கு படை யெடுத்து வருகின்றனர். இவ் வாறு படையெடுத்துச் செல் வோர் நீண்டநேரம் வரிசையில் காத்திருந்தே இதனைப் பெற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக் கின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணத் திலும் ஏனைய மாவட்டங்களைப் போன்று குறித்த வருடத்துக் கான வரிப்பத்திர அனுமதி முறை நீக்கப்பட்டு, ஒரு வருடத் திற்கானது என்ற வகையிலான வரி அனுமதிப்பத்திரங்கள் (பதிவுசெய்யும் திகதியிலிருந்து 01 வருடகாலம்) தற்போது விநி யோகிக்கப்பட்டு வருவதானது பொதுமக்களுக்கு பெரும் ஆறு தலை அளித்துள்ளது. (03)

# விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற் றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சினால் தேசிய அருங்கலைகள் பேரவையில் வெற்றிடமாகவுள்ள அதிகாரி களுக்குக் கிட்டிய சேவை iii ஆம் தரத்தில் சந்தைப்படுத்தல் உதவியாளர் பதவிக்காக தகை மையுள்ள இலங்கை வாழ் பிரஜைகளிடமிருந்து விண்ணப் பம் கோரப்பட்டுள்ளது.

கல்வித் தகைமையாக அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தை ஒரு பாட மாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், தேசிய அருங்கலை கள்பேரவை, ஜனகலா கேந்திர கட்டடத்தொகுதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

மேலதிக விபரங்களை தின முரசு காரியாலயத்தில் பார்வை யிடலாம்.

# இலவச சீருடை விநியோகம்

(அச்சுவேலி)

புதிய கல்வியாண்டிற்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்களுக்கான இலவசச் சீருடைகள் இம்மாதம் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் மூன்றாம் தவணை விடுமுறைக்கு பாடசாலைகள் மூடப்படுவதற்கு முன்னர், மாணவர்களுக்கான இலவசச் சீருடைத்துணிகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவை வந்தடைவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக அவற்றை உரிய முறையில் மாணவர்களுக்கு வழ்ங்க முடியவில்லை. எனினும் இம்மாதம் அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாணவர்களுக்கு தேவையான சீருடைத்துணி கள் சம்பந்தமான தரவுகள் பாடசாலை அதிபர்கள் மூலம் ஏற்கனவே வலயக்கல்வி அலுவலகங்களினால் சேரிகரிப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (03)

# முரசின் இன்றைய பலன்

(06.01.2012 -வெள்ளிக்கிழமை)

கர வருஷம் மார்கழி 21 ஆம் திகதி சுவாதசி
முற்பகல் 11.03 நட்சத்திரம் ரோகிணி பின்இரவு 2.58 வரை
பிரதோஷ விரதம்
மரணயோகம் இராகுகாலம் 11.01 - 12.31 சுபநேரம் 6.31-8.01 மணிவரை

சோதிட ஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | சிறு நன்மை, பணப்பிரச்சினை, உதவிகள் கிட்டும், மகிழ்ச்சி. |
| ரிஷபம்:- | பாராட்டு, எச்சரிக்கையாகச் செயற்படல், உடல் உபாதை, கடன் பிரச்சினை. |
| மிதுனம் :- | சிக்கல், பொருள்வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, வெளியூர்பயணம். |
| கடகம் :- | உதவி, நினைத்தது கைகூடும், வீட்டில் மாற் றம், தேகாரோக்கியம். |
| சிம்மம் :- | நண்பர் உதவி, அன்புத்தொல்லை, மனவருத் தம், நம்பிக்கைத்துரோகம். |
| கன்னி :- | பக்தி, முக்கிய செய்தி, வீண்வம்பு, செலவில் சிக்கனம். |
| துலாம் :- | கவனம் தேவை, காரியம் கைகூடும், வாகன யோகம், பெண்கள் உதவி. |
| விருச்சிகம்- | நல்லாசி, வெளியூர்ப்பயணம், உற்சாகக் குறைவு, வம்பில் மாட்டநேரும். |
| தனுசு:- | எதிர்ப்புப் போட்டிகள், ஆதாயம், பணப்புழக் கம், வீண்பேச்சை தவிர்க்க. |
| மகரம் :- | வீண் செலவு, தன்னம்பிக்கை, பிரச்சினை அகலும், தொழில் ரீதியான வரவு. |
| கும்பம் :- | நல்லவாய்ப்பு, பாராட்டு, பணவரவு, வெளியூர்ப் பயணம். |
| மீனம் :- | புதுமுயற்சி, பணியில் தடைஇல்லை, விருப்பம் நிறைவேறும், வசதிகள் பெருகும். |

# உயர்தர பெறுபேற்றில் குளறுபடி
# ௯ நாட்களில் கிடைக்கும் தீர்வு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை பெறுபேறு குளறுபடி தொடர்பான விசாரணைக் குழுவின் முடிவினை இன்னும் 9 நாட்களின் பின்னர் அறிந்துகொள்ள முடியும் என இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்

நாரஹேன்பிட்டியவிலுள்ள அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

2011 உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளில் குளறுபடிகள் ஏற்பட்டுள்ளன. இதற்காக பரீட்சைகள் மீதும் பரீட்சைத் திணைக்களம் மீதும் பெற்றோர் நம்பிக்கை இழக்கக்கூடாது என அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சருடன் நான் கலந்துரையாடியதில் கணினியில் பெறுபேறுகளைத் தரவேற்றம் செய்யும்போது மூவரால் ஒரே பெறுபேறுகள் மூன்றுதடவை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனாலேயே குழப்பம் ஏற்பட்டதாகத் தெரியவந்தது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு வாரங்களுக்குள் விசாரணை அறிக்கையையும் கோரியுள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் என்ற ரீதியில் இந்தக் குளறுபடி தொடர்பில் பொறுப்புக்கூறும் கடமை எனக்கும் உள்ளது.

அதற்காக நான் கல்வி அமைச்சர் மீதோ எந்தவொரு நபர் மீதோ குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.



முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் இந்த ஆணைக் குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சுமார் மூன்று நான்கு மணித்தியாலங்கள் அவருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்துக்குச் சென்றும் ஆணைக்குழுவினர் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதி வழங்கிய காலக்கெடு முடிவடைவதற்கு இன்னமும் 9 நாட்கள் உள்ளன. 9 நாட்களின் பின்னர் இந்த விடயம் தொடர்பான விசாரணைக் குழுவின் முடிவினை அறிந்து கொள்ளலாம்.

இம்முறை இடம்பெற்ற குளறுபடிகளை வைத்துக் கொண்டு பரீட்சைகள் திணைக்களத்தின் மீதோ அல்லது அது நடாத்தும் பரீட்சைகள் மீதோ பெற்றோரும் மாணவர்களும் நம்பிக்கை இழக்கக்கூடாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தொற்றாத நோய்கள் தொடர்பாக
## அரச ஊழியருக்கு வைத்திய அறிக்கை

(கொழும்பு)

அரச ஊழியர்கள் அனைவருக்கும் தொற்றுநோய் அல்லாத நோய்கள் குறித்து பிரத்தியேக வைத்திய அறிக்கையொன்றை விநியோகிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் 13 இலட்சத்திற்கும் அதிகமான அரச ஊழியர்களுக்கு வைத்திய அறிக்கைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், பக்கவாதம், புற்றுநோய் போன்ற நோய்களின் தன்மை தொடர்பில் அரச ஊழியர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

அவர்களின் கொலஸ்ட்ரோல் மட்டம் மற்றும் உடற்பருமன் என்பன குறித்து பின்னர் வைத்திய அறிக்கை ஒன்று விநியோகிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது.

# 4 இந்திய மீனவர் கைது

(கொழும்பு)

சட்ட விரோத முறையில் கடல் எல்லையை மீறி இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்த நான்கு இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த மீனவர்களுடன் அவர்களின் படகுகளும் நேற்று அதிகாலை தலைமன்னார் வடக்கு கடற்பிரதேசத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# பாதாளக் குழுக்கள் உருவாக வறுமையே காரணமாகும்
## என்கிறார் அமைச்சர் விமல்



(கொழும்பு)

இலங்கையில் பாதாள உலகக் குழுக்கள் உருவாவதை பொலிஸாராலும் படையினராலும் தடுக்க முடியாது என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அனுராதபுரத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸார் மற்றும் பாதுகாப்பு பிரிவினர் தற்போதுள்ள பாதாள உலகக் குழுக்களை ஒழிக்க முடியும். எனினும் பாதாள உலகக் குழுக்கள் உருவாவதை தடுக்க முடியாது. பாதாள உலகக் குழுக்கள் வறுமை காரணமாகவே உருவாகின்றன.

பொருளாதார ரீதியில் ஒருவர் ஸ்திரமாக இருப்பாராயின், சமூகத்துடன் இணைந்து வாழக்கூடிய சந்தர்ப்பம் இருக்குமாயின் குற்றவாளிகள் உருவாவதற்கான சந்தர்ப்பம் குறைவடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பெற்றோலில் கலப்படம் செய்த அதிகாரிகள் குறித்து விசாரணை
## அமைச்சர் சுசில் தகவல்



(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் இந்திய எண்ணெய் நிறுவனம் ஆகியவற்றினால் விநியோகம் செய்யப்படும் பெற்றோலில் கலப்படம் செய்யப்படுவதாகவும் இதில் உயர் அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பெற்றோலில் கலப்படம் செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்நிலையில், இலங்கை பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரிகள் இந்த மோசடிகளுடன் தொடர்புபட்டிருப்பதாக பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பெற்றோலுடன் மண்ணெண்ணை கலப்படம் செய்த பெற்றோலைப் பயன்படுத்துவதனால் வாகனங்களுக்கு பாரியவில் சேதம் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

மேலும், திருகோணமலை, கடுவெல, குருணாகல், கந்தளாய் போன்ற பிரதேசங்களை மையமாகக் கொண்டு இந்த மோசடி இடம்பெற்றுள்ளன என்றார்.

இதனையடுத்து, தரம் குறைந்த பெற்றோலை விற்பனை செய்த எம்பிலிபிட்டிய மற்றும் அபராதுவ பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பெற்றோலில் கலப்படம் செய்த 13 பேர் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாவனைக்குதவாத நிலையில் பெருமளவு முத்திரை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தபால் திணைக்களத்தில் பாவனைக்குதவாத 18 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த முத்திரைகளை தாம் கைப்பற்றியுள்ளதாக தபால் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

முத்திரை காரியாலயங்களில் உள்ள பெட்டகங்களில் இந்த முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக தபால் சேவைகள் அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பிரனாந்து தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக இந்த முத்திரைகள் பெட்டகங்களில் வைக்கப்பட்டிருந்ததன் காரணமாவே பாவனைக்குதவாத நிலையில் தற்போது காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

தபால் திணைக்களத்தில் உள்ள தொழிற்சங்கம் ஒன்று தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, ஒரு விசேட குழு நாரஹேன்பிட்டியவிலுள்ள தபால் திணைக்களத்தின் காரியாலயத்தில் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் விளைவாக இம் முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த முத்திரைகளை கணக்கிடுவதற்காக நாரஹேன்பிட்டி தபால் திணைக்களத்தின் களஞ்சியசாலைக்கு கையளித்திருப்பதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த முத்திரைகளில் அதிகளவானவை பாவனைக்குட்படுத்த முடியாத அளவுக்கு அதிகமாக சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த முத்திரைகளை சர்வதேச சந்தையில் விற்பனை செய்து தபால் திணைக்களத்திற்கு வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்

# பஸ் டிக்கெட்டுக்கு பதிலாக ரீலோட் அட்டைகள் அறிமுகம்

(கொழும்பு)

இ.போ.ச பஸ்களில் டிக்கட் வழங்கும் முறையை நிறுத்தி ரீலோட் அட்டை வழங்கும் முறையொன்றை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்க உள்ளதாக இ.போ.ச தலைவர் எம்.டி. பந்துசேன தெரிவித்தார்.

தெற்கு நெடுஞ்சாலையினூடாக புதிய இ.போ.ச பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும் வைபவம் மகரகம பஸ்தரிப்பிடத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இரண்டு இ.போ.ச. அதி சொகுசு பஸ்களை அதிவேக நெடுஞ்சாலையில் ஈடுபடுத்த அனுமதி பெற்றுள்ளோம் தேவைப்பட்டால் மேலும் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவோம். நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப இ.போ.ச வில் பல புதிய மாற்றங்களை செய்து வருகிறோம் பஸ்களில் ஒன்லைன் ஊடாக ஆசனப் பதிவு செய்யும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் குமார வெல்கம வின் ஆலோசனைப்படி டிக்கட்டுக்குப் பதிலாக ரீலோட் அட்டை வழங்கும் புதிய முறையை விரைவில் கொண்டு வர உள்ளோம். வெப்தளத்தினூடாக இந்தச் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. இ. போ. ச பஸ்களின் தொகையை ஏழாயிரமாக அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

# ஒருமாதத்தில் ௬௦ துஷ்பிரயோகம்

கடந்த மாதம் மட்டும் இலங்கையின் பல பிரதேசங்களிலும் 77 சிறு வயதினர் உட்பட 86 பேர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதானது மிகவும் மோசமான குற்றச்செயலாகும். அதிலும் சிறுவர்கள் இவ்வாறு துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்படுவதானது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு செயற்பட்டு வருகின்றது. சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். அத்தோடு சிறுவர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்கி அவர்களைப் பாதுகாப்பாக வளர்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பெறுபேற்றில் பிரச்சினையா?
# உடன் அறிவிக்க கோரிக்கை

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து தமக்கு அறிவிக்குமாறு பெறுபேறுகள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழு கோரியுள்ளது.

மீள் பரிசீலனை தவிர்ந்த ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறு குழுவின் தலைவர் தாரா விஜேதிலக குறிப்பிட்டார்.

நாளை சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு முன்னர் 011-4354729 எனும் தொலைநகல் இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

பரீட்சார்த்தியின் பெயர், பரீட்சை இலக்கம், மாவட்டம் மற்றும் அவர்களின் பாடசாலையின் பெயர் என்பன அதில் கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் எனவும் நிபுணர் குழு தெரிவிக்கின்றது.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் ஆராய தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் தாரா விஜேதிலகவின் தலைமையில் ஐவர் அடங்கிய இந்த நிபுணர் குழு அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போட்டியை இரசித்து விளையாட முன்னுரிமை கொடுக்கும் சச்சின்




100ஆவது சதத்தைப் பற்றிய சிந்தனையின்றி போட்டியை மிகவும் இரசித்து விளையாடுவதற்கே முன்னுரிமை கொடுக்கிறேன் என்று சச்சின் தெரிவித்துள்ளார்.

சச்சினின் 100ஆவது சதத்தை எதிர்நோக்கி உலகம் முழுவதிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் காத்திருக்கும் நிலையில் இது தொடர்பாக அவர் கூறியதாவது,

100ஆவது சதம் என்பது வெறும் எண்ணிக்கைதானே என்று சொல்வது எளிது. ஆனால் அதை அடிப்பது கடினம். 100ஆவது சதம் குறித்து பெரிய அளவில் எதிர்பார்ப்பு உள்ளது. ஆனால் நான் போட்டியை இரசித்து விளையாடவே விரும்புகிறேன். இரசிப்புத் தன்மை மிகவும் முக்கியமானது என்று நினைக்கிறேன். இந்தத் தொடரைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சியோடு விளையாடுவதிலும், வெற்றிபெறுவதிலுமே முழுக் கவனமும் உள்ளது என்றார்.

# இனிங்ஸ் தோல்வியை தவிர்க்குமா இந்தியா



(சிட்னி)

சிட்னியில் இடம்பெற்று வரும இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இனிங்ஸ் தோல்வியை. தவிர்க்க, இந்திய அணி போராடி வருகிறது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் சிட்னியில் நடக்கிறது. இந்திய அணி முதல் இனிங்சில் 191 ரன்கள் எடுத்தது. இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவில், அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்சில், 4 விக்கெட்டுக்கு 482 ரன்கள் எடுத்திருந்தது. கிளார்க் (251), ஹசி (55) அவுட்டாகாமல் இருந்தனர்.

நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. கிளார்க், ஹசி இருவரும் தொடர்ந்து தங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஹசி தனது 16ஆவது சர்வதேச சதத்தை அடித்தார். மறு முனையில் தனது அசத்தலைத் தொடர்ந்த கப்டன் கிளார்க், முதன் முதலாக முச்சதம் அடித்து சாதித்தார்.

இந்த நிலையில் அவுஸ்ரே லிய அணி முதல் இனிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 659 ரன்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. கிளார்க் (329), ஹசி (150) அவுட்டாகாமல் இருந்தனர்.

இனிங்ஸ் மற்றும் 468 ரன்கள் பின்தங்கிய நிலையில் இந்திய அணி இரண்டாவது இனிங்சை தொடக்கியது. சேவக் (4), ராவிட் (29) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நிறைவில் இந்திய அணி இரண்டாவது இனிங்சில் 2 விக்கெட் இழபபிற்கு 114 ரன்கள் எடுத்திருந்தது. கம்பீர் (68), சச்சின் (8) அவுட்டாகாமல் இருந்தனர்.

கைவசம் 8 விக்கெட்டுகள் மட்டுமே உள்ள நிலையில், இனிங்ஸ், 354 ரன்கள் பின்தங்கியுளளது இந்திய அணி, படுதோல்வி யைத் தவிர்க்குமா? அவுஸ்ரேலிய அணி சார்பில் ஹில்வென்கஸ் 2 விக்கெட்டுக்களையும் கைபபற்றினார்.

# பிரதேச செயலக கிரிக்கெட்; வெற்றிபெற்றது தெல்லிப்பளை

(வலிகாமம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வலிகாமம் வலயத்துக்குட்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தியதாக நடைபெற்ற இந்தப் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அன்ரன்யோகநாயகம் எழிலரசி தலைமையில் இப்போட்டி நடைபெற்றது. இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பளை பிரதேச செயலக அணி நட்புக்கான வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 15 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு ஆடிய உடுவில் பிரதேச செயலக அணி 15 ஓவர்கள் நிறைவில் 81 ஓட்டங்களை 08 விக்கெட்டுக்களை இழந்து பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.அனுரதனும் போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.கோசிகனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# சென்னை ஓப்பன் ரென்னிஸ் காலிறுதியில் "வாவ்ரின்கா"

(சென்னை)


சென்னை ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு நடப்பு சம்பியன் ஸ்ரனிஸ்லோஸ் வாவ்ரின்கா முன்னேறினார்.

சென்னையில் ஏ.டி.பி., அந்தஸ்து பெற்ற சென்னை ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்றுமுன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில், சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்கா, பிரான்சின் ரோஜர் வாசிலின் மோதினர்.

இதன் முதல் செட்டை வாசிலின் 3-6 எனக் கைப்பற்றினார். பின், எழுச்சி கண்ட வாவ்ரின்கா, இரண்டாவது செட்டை 6-3 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் அபாரமாக ஆடிய வாவ்ரின்கா 7-5 என கைப்பற்றினார். இறுதியில் வாவ்ரின்கா 3-6, 6-3, 7-5 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு இரண்டாவது சுற்றுப் போட்டியில் இஸ்ரேலின் டுடி சிலா, பிரான்சின் பெனாய்ட் பேரியை 4-6, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு இரண்டாவது சுற்றுப் போட்டியில், ருமேனியாவின் விக்டர் ஹனஸ்கு, கனடாவின் மிலோஸ் ரயோனிக்கிடம் 1-6, 4-6 என்ற நேர் செட்டில் தோல்வி அடைந்து வெளியேறினார்.



இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் கொலம்பியாவின் ஜுயன் செபஸ்ரியன் கேபல், றொபேட் பராஹ் ஜோடி, ரஷ்யாவின் அலெக்சாண்டர் குட்ரியவ்ட்சேவ், பெல்ஜியத்தின் ஒலிவியர் ரோசஸ் ஜோடியை சந்தித்தது. இதில் கேபல்-பராஹ் ஜோடி 6-4, 6-4 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறியது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த இரட்டையர் முதல் சுற்றில் பயஸ், டிப்சரிவிச்(செர்பியா) ஜோடி, கனடாவின் வாசக் பாஸ்பிசில், மிலோஸ் ராவோனிச் ஜோடியை 6-3, 4-6, 10-7 என்ற செட் கணக்கில் வீழ்த்தி, காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

# புகழுடன் வெளியேற விரும்பும் பொண்டிங்



ஓட்டங்கள் குவிக்கும் வேட்கை குறைந்தால் கிரிக்கெட்டில் இருந்து விலகிவிடுவேன் என்று ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு கடும் நெருக்கடிக்கு மத்தியில் சிட்னி டெஸ்டில் சதமடித்த பின்னர் அவர் மேலும் கூறியதாவது,

என் வாழ்க்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அண்மையில் கடும் நெருக்கடிக்கு ஆளானேன். அதனால் கடுமையாக உழைத்தேன். நான் பெருமை மிக்க மனிதன். கிரிக்கெட்டில் இருந்து விலகும்போது அதே புகழுடன் வெளியேறவே விரும புகிறேன் என்றார்.

## ஹோலிக்கு அபராதம்




(சிட்னி)

அவுஸ்ரேலிய-இந்திய அணிகளுக்கிடையில் சிட்னியில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாளான நேற்றுமுன்தினம் எல்லைக் கோட்டுக்கு அருகே நின்றிருந்த இந்திய வீரர் விராட் ஹோலியை சில அவுஸ்ரேலிய இரசிகர்கள் கிண்டல் செய்தனர். இதனால் ஆத்திரம் அடைந்த ஹோலி அவர்களை நோக்கித் தனது கைவிரலை நீட்டி பதிலடி கொடுத்தார். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விராட் ஹோலியின் இந்தச் செயல் விதிமுறை மீறல் எனக்கூறி போட்டி நடுவரால் அவரது ஊதியத்திலிருந்து 50 வீத அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் போட்டி நடுவரிடம் ஹோலி தனது நிலையை வருத்தத்துடன் விளக்கி மன்னிப்பும் கேட்டுள்ளார்.

# வெற்றி பெறுவதற்கு வேண்டும் அதிர்ஷ்டம்



(சிட்னி)

வெற்று பெறுவதற்கு அதிர்ஷ்டமும் கை கொடுக்க வேண்டுமென இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளெட்சர் தெரிவித்துள்ளார்.


பிளெட்சர் தலைமையில் இந்திய அணி தொடர்ச்சியாக வெளிநாட்டு மைதானங்களில் 5 தோல்விகளைக் கண்டுள்ளது.

சிட்னி டெஸ்டிலும் இந்திய அணி மோசமாக ஆடி வருகிறது. இந்நிலையில் பிளெட்சர் கூறுகையில், கிரிக்கெட்டில் அதிர்ஷ்டமும் தேவைப்படுகிறது.

சச்சின் முதல் இனிங்சில் ஆட்டமிழந்ததை பார்த்தாலே அது தெரியும். இது போன்று அவர் எத்தனை ஷொட்கள் ஆடி பவுண்டரிகள் விளாசியுள்ளார்.

சில முறை இப்படிதான் அதிர்ஷ்டம் எமக்கு எதிராக திரும்பிவிடும். டோனி நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்ததில் தவறில்லை. 2ஆவது இன்னிங்சில் நடுத்தர துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்புடன் ஆடி ஓட்டங்கள் சேர்ப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

# கொரிய ஓப்பன் பட்மின்ரன் முதல் சுற்றில் சாய்னா வெற்றி



கொரிய ஓப்பன் பட்மின்ரன் தொடரின் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், இந்திய வீராங்கனை சாய்னா நேவல் வெற்றி பெற்றார்.

தென் கொரியாவில் உள்ள சியோலில், கொரிய ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடைபெறுகிறது. நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் சாய்னா நேவல், ஸ்கொட்லாந்தின் சுசானை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய சாய்னா 21-5, 21-6 என்ற நேர் செட்டில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில், இந்தியாவின் ஜுவாலா கட்டா, அஷ்வினி பொன்னப்பா ஜோடி, மலேசியாவின் விவியன் காஹ் முன் ஹோ, ஹே வெய் வோன் ஜோடியை சந்தித்தது. இதில் ஜுவாலா-அஷ்வினி ஜோடி 21-19, 21-18 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. கலப்பு இரட்டையர் முதல் சுற்றில், இந்தியாவின் திஜு, ஜுவாலா கட்டா ஜோடி 21-18, 21-18 என்ற நேர் செட்டில் மலேசியாவின் பெங் சூன் சான், லியு யிங் கோஹ் ஜோடியை வீழ்த்தியது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், இந்தியாவின் அஜய் ஜெயராம், தென் கொரியாவின் வான் ஹோ ஹஷான் மோதினர். இதன் முதல் செட்டில் தென் கொரிய வீரர் 1-0 என முன்னிலை வகித்திருந்த போது, காயம் காரணமாக அஜய் ஜெயராம் விலகுவதாகத் தெரிவித்தார். இதனால் வான் ஹோ ஹஷான் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

# அரசு - கூட்டமைப்புப் பேச்சுவார்த்தை; பிரச்சினை தீர்ப்பதற்கான அடித்தளம்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையிலான பேச்சுவார்த்தை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குச் சிறந்த களமாக அமையுமென தெரிவித்த அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இவ்விடயத்தில் லங்கா சம சமாஜக் கட்சி தமது பூரண ஆதரவினை எப்போதும் வழங்கத் தயாராகவுள்ளதெனவும் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் லங்கா சம சமாஜக் கட்சியின் சார்பில் கருத்துத் தெரிவித்த அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

எதற்கு நேரடித் தீர்வு காண்பது, எதற்குத் திருத்தங்களைக் கொண்டு வருவது போன்ற விடயங்கள் பேச்சுவார்த்தைகளின் மூலமே தீர்மானிக்க முடியும். அதனால் பேச்சுவார்த்தைகள் மூலம் கருத்துக்கள் பரிமாறப்படுவது இதில் முக்கியமபெறுகிறது. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரம் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன.

எனினும் நடைமுறைப்படுத்தலில் அவை முறையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. இதற்கும் கூட பேச்சுவார்த்தை மூலமே தீர்மானமொன்றை எட்ட முடியும்.

பேச்சுவார்த்தை மூலமே ஒரு சிறந்த அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்பது லங்கா சம சமாஜக் கட்சியின் முழுமையான நம்பிக்கை. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் தீர்வு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களையும் திருப்திப்படுத்துவதாக அமைய வேண்டும்.

சர்வ கட்சிக் குழுவைக் கூட்டி அரசியல் தீர்வொன்றுக்கான அடித்தளத்தை எம்மால் இட முடிந்துள்ளது. அதனைத் தொடர்ந்ததாகவே அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமான பேச்சுவார்த்தையைக் குறிப்பிட முடியும்.

அதனோடிணைந்ததாக தற்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு பற்றி பேசபபடுகிறது. இப்பிரச்சினைத் தீர்வுக்கு அது மிகுந்த முக்கியத்துவத்தை வழங்கும் என நாம் நம்புகிறோம்.

அரசு - தமிழ்க் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையானது சகல பிரச்சினைகள் தொடர்பிலும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு சிறந்த தளமாகவுள்ளது. கருத்துக்கள் பரிமாறப்படும் போதே தீர்வுகளைப் பெற அது வழிவகுக்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையைத் தொடர்வதோடு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைந்து செயற்பட வேண்டும். இந்த இரு விடயங்களிலுமே லங்கா சம சமாஜக் கட்சி தமது பூரண ஆதரவினை வழங்கும எனவும் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

## ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில்
# நினைவுத் தூபி மீது தாக்குதல்



(கொழும்பு)

கொழும்பு-ஜயவர்தனபுர பல்கலைக் கழக நினைவுத் தூபி மீது குண்டுத் தாககுதல் நடத்தப்பட்டுள்ள சம்பவம் ஒன்று நேற்று அதிகாலையில் இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக நினைவுத் தூபிக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றிய ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார,

இந்தச் சம்பவத்துடன் இராணுவத்துக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு இருக்கலாம் என தான் சந்தேகிப்பதாகத் தெரிவித்துள்ளார். இவ்வாறானதொரு தாககுதலை நிச்சயமாக மாணவர்கள் மேற்கொண்டிருக்க முடியாது எனவும் கூறியுள்ளார். இதேவேளை, இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அனைத்து பீட மாணவர்களும் கல்வி நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்துள்ளதுடன் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பொன்சேகா விடுதலை மனு கையொப்பங்களில் சந்தேகம்



(கொழும்பு)

சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்து பொதுமக்களிடம் கையொப்பம் பெறப்பட்டு அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகமான வெள்ளை மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மனுவில் சந்தேகங்கள் எழுந்துள்ளன என செய்திகள் வெளிவந்துள்ளன.

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பெயர்கள் மற்றும் கையொப்பங்களில் மஹிந்த ராஜபக்ஷ என்ற பெயரில் ஐந்து கையொப்பங்களும் ஷிராந்தி ராஜபக்ஷ என்ற பெயரில் ஐந்து கையொப்பங்களும் கோத்தபாய ராஜபக்ஷ என்ற பெயரில் இரண்டு கையொப்பங்களும் காணப்படுகின்றன என அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதபோன்றே பஸில் ராஜபக்ஷ என்ற பெயரில் இரு கையொப்பங்களும் நாமல் ராஜபக்ஷ, யோசித ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களில் தலா இரண்டு கையொப்பங்களும் ரோஹித ராஜபக்ஷ, சசீந்திர ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களில் தலா ஒவ்வொரு கையொப்பங்களும் இடப்பட்டுக் காணப்படுவதே இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என அந்தச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

# தலைமைத்துவப் பயிற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் சகலருக்கும் தலைமைத்துவ பயிற்சி வழங்கப்பட உள்ளதாகவும், இதன்படி எதிர்வரும் காலங்களில் மாணவ பௌத்த பிக்குகளுக்கும் இராணுவ முகாம்களில் பயிற்சி அளிக்கப்படுமெனவும் உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு முதல் பௌத்த பிக்குகளுக்கும் தலைமைத்துவ பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக உயர்கல்வி அமைச்சின் மாணவர் விவகார பணிப்பாளர் நாயகம் கீர்த்தி மெவெல்லகே தெரிவித்தார். பௌத்த பிக்குகளுக்கான பல்க்லைக்கழகங்களிலும் இவ்வாறு தலைமைத்துவ பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

பௌத்த பிக்குகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி அளிப்பது குறித்து உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஏற்கனவே சிரேஷ்ட பௌத்த பிக்குகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

# ஜனாதிபதியாக மகிந்த தெரிவானால் 11 வருட திட்டங்களை அழித்துவிடுவார்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானால், தாம் 11 வருடங்களாக மேற்கொண்ட அனைத்துக் காரியங்களும் அழிந்துபோய் விடும் எனறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

தாம் பதவியில் இருந்து விலகிச்செல்லும் போது, 2005 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி இராஜதந்திரிகளுக்கு வழங்கிய விருந்துபசாரத்தின் போதே சந்திரிகா இந்தக் கருத்தை வெளிப்படுத்தியதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தகவலை அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஜெப்ரி லங்ஸ் ரெட் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு கேபிள் மூலம் அறிவித்திருந்தார்.

தாம் ஒருவேளை வீதியில் வாழ வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் சந்திரிகா இந்தச் சந்திப்பின்போது குறிப்பிட்டுள்ளார். விடுதலைப்புலிகள், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதை விரும்புவதாக தமக்கு அறியக்கிடைத்ததாகவும் சந்திரிகா இதன்போது தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அப்போது (2005) வசித்த மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரான இராணுவத்தில் பணியாற்றிய ஒருவர், படைகளில் இருந்து தப்பி வந்த 300 படையினரைக் கொண்டு யாழ்ப்பாணத்தின் தேர்தல் பணிகளுக்காகச் செல்லவிருந்ததாகவும் அதனைத் தாம் தடுத்ததாகவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க, தேர்தலில் வெற்றி பெற்றால் தமது பொது வாழ்க்கை தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும் சந்திரிகா இதன் போது குறிப்பிட்டதாக அப்போதைய அமெரிக்கத் தூதுவர் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.



சுனாமி அனர்த்தத்தில் தனது பெற்றோரை இழந்த யாழ்ப்பாணத்தைத் சேர்ந்த மாதவன் என்ற சிறுவனுக்கு ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ ஒரு இலட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கினார்.

மகரகமை புற்றுநோய் சிகிச்சை நிறுவனத்தில் சிகிச்சை பெற்றுவரும் மாதவனுக்கு பாடகியான கித்மி மிஹறாரா இந்த நிதிக்கான காசோலையைக் கையளித்தார்.

# காணி, பொலிஸ் அதிகாரத்தால் முஸ்லிம் காங்கிரஸினுள் பிளவு?

(கொழும்பு)

Sri Lanka Muslim Congress


மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்குதல் மற்றும் 13ஆவது திருத்தச் சட்டமூல அமுலாக்கம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பாரியளவில் பிளவு ஏற்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அண்மையில் தெரிவித்திருந்த போது, அதற்கு முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த சிலர் ஆதரவு தெரிவித்திருந்தனர்.


முஸ்லிம் மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அவசியமில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

எனினும், குறித்த அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமென்று கட்சியின் முதன்மை உறுப்பினர்கள் கோரி வருவதாகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளதாகவும், இதனால் கட்சிக்குள் முறுகல் நிலை ஏற்பட்டு, பிளவு ஏற்படக் கூடிய 'சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டதாக அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.


**வித்தியாசமான உருவின் கீழ் கீறிடுக.**

36) 


1 2 3 4

37) 



1 2 3 4

38) 

1 2 3 4


39) 

1 2 3 4


40) 

1 2 3 4


**கண்ணாடியில் தோன்றும் கடிகார முகம் தரப் பட்டுள்ளது. சரியான நேரத்தைத் தெரிந்து கோடிடுக.**




1) 5.00
2) 7.00
3) 12.25



1) 10.30
2) 6.10
3) 1.30



1) 3.00
2) 9.00
3) 3.30



1) 6.05
2) 11.30
3) 6.00

**பின்வரும் கவிதையை வாசித்து 41 - 45 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

உடலைத் தூய்மை செய்வதால்
உயிரைப் பாதுகாக்கலாம்
திடமும் சுகமும் உள்ளவர்
தினமும் மகிழ்ச்சி கொள்ளுவர்

41) யார் தினமும் மகிழ்ச்சி கொள்ளுவர்? ..........................................
42) தினமும் என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது?..........................................
43) தூய்மை என்பதற்கு ஒத்த சொல் தருக..........................................
44) கொள்ளுவர் என்பதை இறந்த காலத்தில் எழுதுக..........................................
45) சுத்தம் பற்றி நீர் அறிந்த பழமொழிகள் இரண்டினை எழுதுக..........................................

## கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 11 கேள்விகளின் விடைகள்

01. 01
02. 11
03. 02
04. 10
05. 04
06. 07
07. 03
08. 08
09. 05
10. 12
11. 06
12. 09
13. 2 மணி 55 நிமிட
14. 80
15. கொழும்பு நகரின் பெருமையை
16. காலிமுகக் கடற்கரை
17. இந்து சமுத்திரம்
18. சிறிய
19. கிராமம்
20. கிட்ட
21. ஒடுங்கிய
22. எழில்/வனப்பு
23. வதனம்
24. பாதை/தெரு/சாலை
25. விருப்பம்/அன்பு/பிரியம்
26. ஆலயம்
27. விசாலமான
28. மேல்மாகாணம்
29. பொருத்தமான விடைக்குப் புள்ளி வழங்குக.
30. இந்தியா/மாலைதீவு
31. 30,000 32. 10,000
33. 10,000 34. 300
35. 59,000 36. 750
37. முறுக்கு 38. தோசை
39. 07 40. 06
41. 04 42. 620
43. நன்றி 44. வணக்கம்
45. Teacher 46. Driver
47. Farmer 48. Nurse
49. Postman 50. Doctor
51. வாகனப் புகை
52. காலநிலை 53. காசோலை
54. மண்புழு 55. பூக்கள்
56. வெட்டுக்கிளி
57. சுத்தமான
58. நன்னீரில்
59. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்
60. இலங்கை போக்குவரத்துச் சபை
61. கிறிஸ்துவுக்கு பின்
62. இலங்கை மின்சார சபை
63. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்
64. முற்பகல் 65. km
66. L 67. M
68. Cm 69. g
70. Kg 71. ml
72. 03 73. 03
74. 01 75. 03
76. பயிரை 77. விழுந்தவன்
78. பாம்பு 79. பாம்பும்
80. சதையும் 81. நெலலிக்கனி
82. 02 83. 03 84. சீதா
85. ரஞ்சன் 86. மாம்பழம், அன்னாசி
87. ரஞ்சன்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி


# கல்வி முரசு

வெளியீடு 12



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**பழவகைகள் பலவற்றின் விலை கீழே தரப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி 1ஆம், 2ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக**





| | | | |
|---|---|---|---|
| ரூ. 20 | ரூ. 16 | ரூ.12 | ரூ.28 |

01) மாம்பழம் ஒன்றினது விலை யாது?
1) ரூ.10 2) ரூ.34 3) ரூ.22

02) அப்பிள் ஒன்றினது விலை யாது?
1) ரூ.32 2) ரூ.6 3) ரூ.22


**வெற்றிடங்களை நிரப்புக.**

03) 


04) 


**கீழே தரப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

05) 1 kg சீனியை 25 g கொண்ட எத்தனை பொதிகளாக்கலாம்?
1) 40 2) 30 3) 50 4) 15

06) 

இவ்வுருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதி குறிப்பது.

1) $\frac{4}{8}$ 2) $\frac{1}{4}$ 3) $\frac{3}{4}$ 4) $\frac{2}{8}$

**சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் இடுக.**


07) கேட்பவருக்கு இல்லையென்னாது கொடுப்பவன் உலோபி ( )

08) ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா பொன் விழா ( )

09) அரசன் முறைகேடாக ஆளும் ஆட்சி கொடுங்கோல் ( )


10) ஒரு இனத்தின் பாரம்பரிய உடை தேசிய உடை ( )

11)




இவ்வுருவின் 1) சுற்றளவு யாது?........................................

2) பரப்பளவு யாது? ........................................




மேலே தரப்பட்ட வரைபடத்தில் A, B, C, D, E, F ஆகிய நகரங்களுக்கான தூரங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றினை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடைதருக.

12) A நகரத்திலிருந்து B, E நகரங்களூடாக F நகரத்தை அடைவதற்குச் செல்ல வேண்டிய தூரம் யாது?

........................................................................................

13) A நகரத்திலிருந்து B நகரம் ஊடாக E நகரத்துக்குச் செல்லும் தூரத்திற்கும் A யிலிருந்து C நகரத்திற்குச் செல்லும் தூரத்திற்கும் இடையேயான வித்தியாசம் எவ்வளவு?

........................................................................................

14) கீழே தரப்பட்டவற்றைக் குறியீடுகளில் தருக.

1. சென்ரிமீற்றர் ........................ 2) லீற்றர் ........................


3) மில்லிலீற்றர் ........................ 4) மில்லிமீற்றர் ........................

5) கிராம் ........................

15) ஒரு மணித்தியாலத்தில் எத்தனை நிமிடங்கள் உண்டு?

........................................................................................

16) 11.45 ஐ கீழே தரப்பட்ட கடிகாரத்தில் குறித்துக் காட்டுக.




17) முன்னும் பின்னுமாக வரும் எண்களை எழுதுக.

.....................400804..........................

பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

18) மயிலின்..................மனதைக் கவர்ந்தது. (அலகு, அழகு, அளகு)

19) வெடிச் சத்தம் கேட்டு மக்கள்................கொண்டு ஓடினார்கள் (கிளி, கிழி, கிலி)

20) நல்ல பழக்கங்களை..............................................(பளகு, பலகு, பழகு)



கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக.

21) மேசை ஒன்றின் விலை ரூ.225 கதிரை ஒன்றின் விலை ரூ.75 மேசை ஒன்றும் கதிரை நாலும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?

........................................................................................

22) 1 சோடி சப்பாத்தின் விலை 63.50 சதம் எனின் 4 சோடி சப்பாத்தின் விலையைக் காண்க.

........................................................................................

23) 4 பிஸ்கட் பெட்டிகளில் மொத்தமாக 126 பிஸ்கட்டுக்கள் உண்டு. 9 பேருக்கு சமமாக பிஸ்கட்டுக்கள் பங்கிடப்படின் ஒருவருக்கு எத்தனை பிஸ்கட்டுக்கள் கிடைக்கும்?

........................................................................................

24) மாதமொன்றின் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையெனின், அம்மாதத்தின் 6ஆம் திகதி என்ன கிழமையாக இருக்கும்?

........................................................................................

கோழிப்பண்ணையொன்றில் வாரமொன்றில் பெற்ற முட்டைகளின் எண்ணிக்கை வருமாறு.

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் |
|---|---|---|---|
| 59 | 13 | 16 | 45 |

25) எந்த நாட்களில் பெறப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை ஒற்றை எண்ணைக் கொண்டதாக அமைந்துள்ளது?

........................................................................................

26) திங்கட்கிழமை பெற்ற முட்டைகளில் 23 முட்டைகள் பழுதடைந்துவிட்டன. எஞ்சிய முட்டைகள் ஒன்று 4/= படி விற்கப்பட்டன எனின், முட்டை விற்றுப் பெற்ற பணம் எவ்வளவு?

........................................................................................

27) திங்கட்கிழமை பெற்ற 59 முட்டைகளையும் விற்றிருந்தால் அவருக்கு மேலதிகமாக எவ்வளவு பணம் கிடைத்திருக்கும்?

........................................................................................

28) நாற்பத்து ஏழு என்னும் உரோமன் எண்ணை ஆக்குவதற்கு எத்தனை தீக்குச்சிகள் தேவை?

........................................................................................

முதலில் தரப்பட்ட சொல்லுக்குப் பொருத்தமான சொல்லை அடுத்துவரும் 4 சொற்களிலிருந்து தெரிவு செய்து கீறிடுக.

29) நாடு 1) மாவட்டம் 2) அரசு 3) தேசம் 4) மாகாணம்

30) ஏர் 1) மண்வெட்டி 2) கலப்பை 3) கோடரி 4) மாடு

31) பூமி 1) காணி 2) தோட்டம் 3) மண் 4) பார்

வித்தியாசமானதின் கீழ்க் கீறிடுக.

32) 1) விமானம் 2) கார் 3) பஸ் 4) லொறி

33) 1) 422 2) 346 3) 321 4) 618

34) 1) தேவாலயம் 2) கோவில் 3) விகாரை 4) பாடசாலை

35) 1) பலா 2) வாழை 3) அப்பிள் 4) மா




# "அதிலென்ன சந்தேகம்"

சந்தையில் கிளிகளை விற்றுக்கொண்டிருந்தான் வியாபாரி. ஒரு கிளியைக் காட்டி என்ன விலை என்று கேட்டபோது "ஆயிரம் ரூபாய்" என்றான் கிளிக்காரன்.

வாங்க வந்தவன் அதிர்ச்சியடைந்து "என்ன நீ கிளிக்கு ஆனை விலை சொல்கிறாயே?" என்று கேட்டான்.

"சாதாரண கிளியில்லை இது. இந்தக் கிளி பேசும்" என்றான் வியாபாரி.



வாங்க வந்தவன் வியப்போடு "கிளியே நீ பேசுவாயா?" என்று கேட்டான்.

"அதிலென்ன சந்தேகம்" என்றது கிளி.

வநதவன் மகிழ்ந்து போய் "ஆயிரமென்ன, அதற்கு மேலும் தரலாம்" என்று பணத்தைக் கொடுத்து விட்டுக் கிளியை வாங்கிச் சென்றான்.

கிளியை வீட்டுக்குக் கொண்டு சென்றான். சென்றதும் "இந்த வீடு உனக்குப் பிடிச்சிருக்கா?" என்று கேட்டான்.

"அதிலென்ன சந்தேகம்" என்றது கிளி.

சாப்பாடு போட்டு விட்டு "சாப்பாடு பிடிததிருக்கிறதா?" என்று கேடடான் "அதிலென்ன சந்தேகம்" என்றது கிளி.

சற்றுநேரம் கழித்து அவன், "நான் வெளியே போகிறேன்... வீட்டுக்கு யாராவது வந்தால் அவர்கள் யாரென்று விசாரித்து வை என்று சொல்லி விட்டு வெளியே போனான்.

கிளி, "அதிலென்ன சந்தேகம்" என்றது. திரும்பி வந்து "யாராவது வந்தார்களா?" என்று கேட்டபோதும் "அதிலென்ன சந்தேகம்" என்றே பதில் வந்தது.

"சொல்லு, யார் வந்தது?" என்று கேட்டான்.

"அதிலென்ன சந்தேகம்?" என்பதே கிளியின் பதில். அப்போதுதான் அவனுக்கு உறைத்தது இந்தக் கிளிக்கு "அதிலென்ன சந்தேகம்" என்ற வார்த்தையைத் தவிர வேறு எதுவும் தெரியாது என்பது.

"உன்னைப் போய் ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கினேனே... என்னைப் போல் முட்டாளும் உண்டா...?" என்று புலம்பினான். "அதிலென்ன சந்தேகம்" என்றது கிளி.

# பேச்சுக்களின் இரண்டு வகை

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து அரசாங்கம் 2011ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒரு இணக்கப் பாட்டுக்கு வந்துவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறி வந்தது நடைமுறைச் சாத்தியமற்றதாகியுள்ளது.

அரசாங்கத் தரப்புடன் அடுத்தடுத்து நடத்தப்பட்ட பேச்சுக்கள் எதுவும் முன்னேற்றம் காணப்படாமலேயே முடிந்து போயுள்ளன. இரண்டு தரப்புமே எந்தவொரு கட்டத்திலேனும் இணக்கப் பாட்டை சந்திக்கக் கூடியளவுக்கு நெருங்கவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் நடைமுறைச் சாத்தியமறறவை என்கிறது அரசாங்கம். அதே வேளை இலங்கை அரசாங்கமோ எதையும் விட்டுக் கொடுக்கின்ற நிலைப் பாட்டில் இல்லை என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

விடாக்கண்டனும் கொடாக்கண்டனும் மோதுகின்ற களமாகவே பேச்சு மேசை அமைந்துள்ளது. எந்தவொரு பேச்சுக்களையும் இரண்டு விதமாக வகைப்படுத்தலாம்.

முதலாவது வகை, பேச்சுக்களின் மூலம் இணக்கப்பாட்டை எட்ட வேண்டும் என்ற குறியோடு - வெறியோடு நடத் தப்படுவது. இதன் அச்சாணியே நெகிழ்வுத்தன்மையும் விட்டுக்கொடுப்பும் தான்.


இரண்டாவது வகை, இணக்கப்பாட்டை எட்டக்கூடாது என்ற இலக்குடன் பொழுது போக்கிற்காகவோ கால இழுத்தடிப்புக்காகவோ நடத்துபடுவது. விட்டுக் கொடாத தன்



மையும் வரட்டுப் பிடிவாதமும் தான் இதன் அச்சாணி. அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கும் இடையில் நடத்தப்படும் பேச்சுக்கள் இதில் எந்த வகையைச் சார்ந்திருக்கிறது என்று யாரும் கூற வேண்டியதில்லை.

*கே. சஞ்சயன் கட்டுரையிலிருந்து...*

# சில்க் ஸ்மிதா - தமிழர்களின் கதை?



பிரான்ஸைச் சேர்ந்த பிரபலமான பின்நவீனத்துவ சிந்தனாவாதியான ஜான் பொத்ரியார் (Jean Baudrillard) தன்னுடைய Simulacra and Simulation என்ற நூலில் Hyperreality என்ற கருத்தாக்கமாக முன்வைக்கிறார். சுருக்கமாகக் கூறினால், எதார்த்தத்துக்குப் பதிலாக, அதன் இடத்தை பிம்பங்கள் எடுத்துக்கொள்வதே ஹைப்பர் ரியாலிட்டி.

தமிழ்க் கலாசாரத்தை நிர்ணயிக்கும் சக்திகளில் பிரதானமாக இருப்பது சினிமா என்பது நம் எல்லோருக்குமே தெரியும். அந்த சினிமாதான் தமிழர்களுக்கான பிம்பங்களை தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பிம்பங்களில் மிக முக்கியமானவர் சில்க் ஸ்மிதா (1960-96).

ஆந்திராவின் ஏழ்மையான குடும்பம் ஒன்றைச் சேர்ந்த விஜயலட்சுமிக்குப் பள்ளிக்குச் சென்று படிக்க வசதியில்லை. அதனால் மிகச் சிறிய வயதிலேயே திருமணம் செய்து கொடுக்கப்பட்டார். திருமண வாழ்க்கை தோல்வியில் முடிய, ஆந்திராவிலிருந்து பிழைப்புக்காக சென்னைக்கு வந்து, கோடம்பாக்கத்தின் சினிமா ஸ்ருடியோக்களில் எடுபிடி வேலைகளைச் செய்துகொண்டிருந்தார். அப்போது அவர் வயது 16. இதேபோல், கிராமத்தில் சிறுவயதில் திருமணம் செய்விக்கப்பட்டு, அது தோல்வியில் முடிந்து, பிறகு சினிமாவில் சேர்ந்து புகழ்பெற்ற நடிகைகள் பலர் இருக்கிறார்கள். உதாரணத்துக்கு ராக்கி, ஜெயா பாதுரி. அந்தக் காலகட்டத்தில் பல நடிகைகளின் கதையும் ஒரே மாதிரியாகத்தான் இருந்திருக்கிறது.

ஒருநாள் ஏ.வி.எம் ஸ்ருடியோவின் எதிரே இருந்த மாவு மில்லில் வேலை செய்துகொண்டிருந்த விஜயா, நடிகர் வினுச் சக்கரவர்த்தியின் பார்வையில் பட விஜயாவின் வாழ்க்கையில் அதிரடித் திருப்பம் ஏற்படுகிறது. வண்டிச்சக்கரம் என்ற படத்தில் விஜயா சாராயம் விற்கும் பெண். பெயர் சிலுக்கு. பிறகு அந்தப் பெயரே அவருக்கு நிலைத்து விடுகிறது.

அதற்குப் பிறகு சில்க் ஸ்மிதா 450 படங்களில் நடித்தார். புகழின் உச்சத்தில் இருக்கும்போது தற்கொலை செய்துகொண்டார். மரணத்தில் மர்மம் இருக்கிறது என்று இன்றளவும் நம்புகிறவர்கள் உண்டு. புகழின் உச்சாணியில் இருந்த சிலுக்குவின் சடலம் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் இருந்தபோது அந்த சடலத்தைப் பெற்றுக் கொள்வதற்குக்கூட யாரும் இல்லை என்பது இன்னொரு துயரமான விசித்திரம்.

இதிலும் பல நடிகைகளின் கதை ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. பர்வீன் பாபி, இந்தியா முழுவதும் பிரபலமாக இருந்த ஒரு நடிகை. பாலிவுட்டின் செக்ஸ் சிம்பலாகக் கருதப்பட்டவர். தத்துவ ஞானி யு.ஜி. கிருஷ்ணமூர்த்தியின் சிநேகிதி. அப்படிப்பட்ட பர்வீன் பாபி 2005 இல் இறந்தபோது அவரது சடலமும் Unclaimed body (Token No. 62) -ஆகத்தான் கிடந்தது.

மேலும், சிலுக்கு பிரபலமான பிறகு தன் சொந்த பந்தங்கள் யாரையும் தன்னோடு சேர்த்துக் கொள்ளவில்லை. அவருடைய மூத்த சகோதரர், சிலுக்கு சாகும்போதுகூட லொரி சாரதியாகத் தான் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சில்க் ஸ்மிதா அளவுக்குப் பிரபலமாக இருந்த நடிகை தமிழ் சினிமாவில் இன்றளவுக்கும் வேறு யாரும் இல்லை. ஒருமுறை இந்திரா காந்தி "யார் இந்த சில்க்?" என்று சிரித்துக் கொண்டே கேட்கும் அளவுக்கு சில்க் ஸ்மிதாவின் பெயர் இந்தியா முழுவதும் பரவியிருந்தது. பெண்களுக்கும் சிலுக்கைப் பிடித்திருந்தது.

இன்றைய கவர்ச்சி நடிகைகள் யாருமே சில்க்கின் நிழலைக் கூடத் தொட முடியவில்லை. அன்றைய கதாநாயக நடிகர்கள் கூட பிரபலம் என்ற அளவில் சிலுக்குவுக்குப் பின்னால்தான் இருந்தார்கள். 17 ஆண்டுகள் ஓர் ஒட்டுமொத்த சமூகத்தின் பாலியல் கனவாக விளங்கினார் சில்க். இது எப்படி நிகழ்ந்தது என்பதை ஆய்வு செய்தால், தமிழ்ச் சமூகத்தை மிகச் சிறந்த முறையில் புரிந்து கொள்ள முடியும்.

ஹைப்பர் ரியாலிட்டி என்பது எதார்த்தம் அல்ல! ஆனால் எதார்த்தத்திலிருந்து முழுதும் அந்நியமானதும் அல்ல. அதே சமயம், அதில் எதார்த்தத்தின் சாயலும் உண்டு. Hallucinatory resemblance என்கிறார் பொத்ரியார். தமிழ்நாட்டை சுமார் 20 ஆண்டுகள் இந்த மாயத்தன்மையினால் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த சில்க் ஸ்மிதாவின் கதையை ஆராய்ந்தால் ஒருவேளை அது தமிழர்களின் கதையையே சொல்லக்கூடும்.

*- சாரு நிவேதிதா*



# பூட்டு பிறந்த விதம்

ஆயிரக்கணக்கான வருடங்களாக பூட்டு உபயோகத்தில் இருக்கின்றது. ஆனால், இப்பொழுது நாம் பயன்படுத்தும் பூட்டை 150 வருடங்களுக்கு முன்னர் தான் கண்டுபிடித்தனர். 1817ஆம் ஆண்டு யாராலும் திறக்க முடியாத பூட்டை வடி வமைப்பவருக்கு பரிசு வழங்கப்படும் என்று இங்கிலாந்து அரசு அறிவித்தது. இதைக் கேள்விப்பட்ட ஜெரி மயாசப் என்பவர் அது மாதிரி ஒரு பூட்டை உருவாக்கினார்.

பூட்டை உடைத்துத் திருடிச் சிறையில் இருக்கின்ற ஒரு திருடனைக் கொண்டு அந்தப் பூட்டை உடைத்துத் திறந்து விட்டால் அவனுக்கு விடுதலை வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், பத்து நாட்களுக்கு மேல் முயற்சி செய்தும் அவனால் பூட்டை உடைக்க முடியவில்லை.

அவனால் மட்டுமல்ல, இதுவரைக்கும் யாராலும் அந்தப் பூட்டை உடைத்துத் திறக்க முடியவில்லை. இருந்தாலும் இது போன்ற பூட்டுக்களை யாரும் பயன்படுத்தவில்லை. காரணம் ஒருவேளை திறப்பு தொலைந்து விட்டால் எப்படித் திறப்பது என்ற பயம் தான்.

நாம் தற்போது பயன்படுத்தும் பூட்டைக் கண்டு பிடித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த லினஸ் யேல். 1861 ஆம் ஆண்டிலிருந்து இவர் கண்டுபிடித்த பூட்டு மாதிரியைத் தான் இதுவரைக்கும் நாம் உபயோகப்படுத்தி வருகின்றோம்.

# தங்களுக்குள் கல்லெறியும் கூட்டமைப்பு!

அரசியலுக்காக என்ன,? என்ன? எல்லாம் செய்ய ஏலுமோ அவளவும் செய்யிறதுக்கு நாங்கள் தயாராய் இருக்கிறம் பாருங்கோ!

நாங்கள் எண்டு சொன்னது எங்கள இல்லக் கண்டியளே? அரசியல் பிரமுகர்களத் தான்! அவயள் வந்து தாங்கள் அடுத்த எலெக்சன்களில எப்பிடியாவது வெண்டிட வேணும் எண்டதில குறியா இருக்கினம் பாருங்கோ.

அதுக்காக என்ன எல்லாம் செய்ய ஏலுமோ? எல்லாத்தையும் செய்யினம். யாரும் ஏதாவது குடுத்தால் அதைச் சனத்துக்கு குடுத்துப் படம் எடுக்கினம். எங்கயாவது அமைப்புக்கள் தொடங்கினால் அதுகளுக்க மூக்குகளை நுழைச்சு பதவியளப் பிடுங்குகினம். இப்பிடி பல பல அசம்பாவிதங்கள் சீ... சீ... அரசியல் வியாபாரங்கள் நடக்குது பாருங்கோ.

கிட்டடியில யாழ்ப்பாணத்தில ஒரு சம்பவம் நடந்திருக்குது கண்டியளே, ஒரு அரசியல் பிரமுகர் இருக்கிறார் உங்களுக்குத் தெரியும் தானே? மாநகர சபையின்ர முக்கியமான ஐயாவா முந்தி இருந்தவர் ரண்டு ஒருக்கால் எலெக்சன் கேட்டுத் தோத்தும் போனவர் இப்ப விளங்குதே ஆர் எண்டு?

அந்த ஐயா ஒரு விளையாட்டுக் காட்டினவராம் போனவாரம்.. என்னண்டு கேக்கிறியளே, அந்த மனிசனுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின்ர தலைவர் எண்ட பதவியில சரியான ஆசை பாருங்கோ.. அப்ப என்ன நடந்ததெண்டால், புதிசா நிருவாகக் குழுத் தெரிவு நடந்திருக்குது. அந்தக் குழு தெரிவு நடக்கேக்க ஐயாவைத் தெரிவு செய்ய இரண்டு பேர் மள மள வெண்டு எழும்பி ஓராள் முன்மொழிய வேற ஓராள் வழிமொழிஞ்சிருக்கிறார்.

அதில ஆருக்காவது எதிர்ப்பு இருக்குதோ? எண்டு கேக்கிறதுக்கு முதலே ஐயா ஓடிப்போய் கதிரையில குந்தீட்டாராம். அது மட்டுமில்ல பாருங்கோ இத்தோட இந்த நிகழ்வை நிறைவு செய்வம் எண்டும் சொல்லிப் போட்டு ஐயா எழும்பிப் போட்டாராம் எண்டால் பாருங்கோவன்.

*- இணையத்திலிருந்து*

# தனியார் மருத்துவர்களும் தமிழகத்தில் போராட்டம்



(சென்னை)

தூத்துக்குடியில் பெண் டாக்டர் சேதுலட்சுமி கொடூரமாக கொல்லப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து நேறறு முன்தினம் அரச டாக்டர்கள் வேலை நிறுத் தம் செய்த நிலையில் நேற்று தனியார் டாக்டர்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர்.

இதனால் தமிழகம் முழுவதும் நோயாளிகளுக்குப் பெரும பாதிப்பும், சிரமமும் ஏற்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் பிரசவத்தின் போது கர்ப்பிணி ஒருவரின் உடல் நிலைமோசமாகி அவரும், வயிற்றிலிருந்த குழந்தையும் இறந்து விட்டனர். இதையடுத்து கோபம்கொண்ட அப்பெண்ணின் கணவரான முச்சக்கர வண்டிச் சாரதியான மகேஷ் என்பவர் தனது நண்பர்களோடு சேர்ந்து அறுவைச சிகிச்சை செய்த டாக்டர் சேதுலடசுமியை கிளினிக்குக்கு வந்து மிரட்டியுள்ளார்.

இதுகுறித்து டாக்டரின் கணவர் பொலிஸில் புகார் கொடுத்தும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில் டாக்டர் சேதுலட்சுமி, கிளினிக்கில் வைத்து மிகக் கொடூரமாக கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கொடூரக் கொலையைக் கண்டிததும், பொலிஸார் துரிதமாக செயறபடாததைக் கண்டித்தும் அரசு டாக்டர்கள் திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இதனால் தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் புற நோயாளிகள் பிரிவு கடுமையாக பாதிக்கப்பட்டது. சிகிசசை பெற வந்த நோயாளிகள் பெரும் தவிப்புக்குளளா கினர்.

இந்த நிலையில் நேற்று தனியார் மருத்துவர்களும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

சென்னையில் நூற்றுக்கணக்கான தனியார் மருத்துவமனைகள், கிளினிக்குகள் மூடப்பட்டுள்ளன. மதுரை, கோவை, திருச்சி உட்பட தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தனியார் மருத்துவர்கள் பணிகளைப் புறக்கணித்து விட்டு ஆங் காங்கே ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

## இந்தியச் செய்திகள்


# இலட்சியங்களை நிறைவேற்ற அர்ப்பணிப்பு அவசியமானது



(சென்னை)

மாணவர்கள் தங்களது இலட்சியங்களை நிறைவேற்ற அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாறற வேண்டும் என இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தெரிவித்துள்ளார். இந்தியாவின் ஒரிசா மாநிலம் தலைநகர் புவனேசுவரத்தில் சிறார் அறிவியல் மாநாட்டில் அவர் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

அறியியல் மற்றும் ஆராய்ச்சியில் சீனா நம் நாட்டை முந்திச் செல்வதை நினைத்து மாணவர்கள் அச்சம் கொள்ளக்கூடாது. சீனாவை மறந்த தங்களது செயற்பாட்டில் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். கடினமாக உழைத்து அதன் மூலம் அறிவாற்றலை பெருக்கிக்கொள்ள வேண்டும்.




# பெரியாறில் அணைகட்டும் உரிமையை தமிழகத்துடன் பகிர்வதற்குத் தயார்

## கேரள அரசு அறிவிப்பு

(திருவனந்தபுரம்)

முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்ட அனுமதிக்கும்பட்சத்தில் அதன் கட்டுப்பாட்டு உரிமையை தமிழகத்துடன் பகிர்ந்து கொள்ளத் தயார் என்று கேரள மாநில அரசு தெரிவித்துள்ளது.

முல்லைப் பெரியாறு அணை வவகாரம் தொடர்பாக திருவனந்தபுரத்தில் கேரள முதல்வர் உம்மன் சாண்டி தலைமையில் புதன்கிழமை மாநில அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. உச்ச நீதிமன்றம நியமித்த அதிகார மளிக்கபபட்ட குழுவின் அறிக்கை குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்துக்குப் பின்னர் உம்மன் சாண்டி செய்தியாளர்களிடம் கூறுகையில்,

நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையிலான உச்ச நீதிமனறக் குழுவின் இரண்டு நாள் கூட்டம் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசனை நடத்தினோம். புதிய அணை கட்டப்பட்டால் அதன் கட்டுப்பாட்டு உரிமையை இரு மாநிலங்களும் பகிர்ந்து கொள்வது என்று கூட்டத்தில் முடிவெடுககப்பட்டது.

புதிய அணையின் உரிமை தொடர்பாக இன்று வெள்ளிக் கிழமைக்குள் கருத்தைத் தெரிவக்க வேண்டும் என்று அதிகார மளிக்கப்பட்ட குழு உத்தரவிட்டுள்ளது. அமைச்சரவையின் முடிவை குழுவிடம் தெரிவிப்போம்.

புதிய அணை கட்ட வேண்டும் என்கிற கோரிக்கையை அதிகாரமளிக்கப்பட்ட குழு தீவிரமாகப் பரிசீலனை செய்திருக்கிறது.

இப்போதிருக்கும் அணையின் பாதுகாப்பு குறித்து மட்டுமே இது வரை அந்தக் குழு ஆய்வு செய்து வந்தது. இப்போதுதான் முதல் முறையாக புதிய அணை குறித்து விவாதிக்கப்பட்டிருக்கிறது என்றார்.

# "காலணா" கூட தகுதியற்றவர் ஹசாரே மாநில காங்கிரஸ் செயலர் விமர்சனம்

(லக்னோ)

சமூக ஆர்வலர் அன்னா ஹசாரேவை காலணா பெறாதவர் என்று மத்திய பிரதேச மாநில காங்கிரஸ பொதுச் செயலாளர் பி.கே. ஹரிப்பிரசாத் விமர்சித்துள்ளார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

எதற்கும் உதவாத அன்னா நாட்டின் பழமை வாய்ந்த கட்சியான காங்கிரஸின் மூத்த தலைவர்களை கடுமையாக விமரசிக்கிறார். நான் மட்டும் இளைஞனாக இருந்தால் இந்நேரம் அன்னாவின் சொந்த ஊரான ராலேகான் சித்திக்கே சென்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைப் பற்றி விமர்சித்தால் என்ன நடக்கும் என்பதை அவருக்கு புரிய வைத்திருந்திருப்பேன்.

காங்கிரஸ் கட்சி மத்திய பிரதேச மாநிலத்திற்கு எவ்வளவோ நன்மைகள் செய்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துளளார்.

இதேவேளை, அன்னாவின் முன்னாள் உதவியாளர் கூறுகையில், லோக்பால் மசோதாவை நிறைவேற்ற அன்னா ஹசாரே மத்திய அரசை கடுமையாகத் தான் வலியுறுத்தி வருகிறார். அம்ரித்சர் வந்த பிரதமருக்கு அவரது ஆதரவாளர்கள் கறுப்புக கொடி காட்டியது கண்டிககத் தக்கதாகும் என்றார்.

# இந்திரா காந்தி விமான நிலையத்தில் தீ

(சென்னை)

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியிலுள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தால் பயணிகள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் சரக்குகள் பாதுகாக்கும் பிரிவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

தீயை அணைக்கும் பணியில் 20 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வண்டிகள் ஈடுபட்டன. திடீரென ஏற்பட்டுள்ள இந்த தீ விபத்தினால் பயணிகளிடத்திலே மிகுந்த பரபரப்பு எழுந்தது.

தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு வீரர்களும், பொலிஸார்களும் குவிக்கப்பட்டனர்.

# புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது

(சென்னை)

தானே புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களை ஹெலிகொப்டரில் பறந்தபடி பார்வையிட்டுள்ளார் முதல்வர் ஜெயலலிதா.

சென்னையிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் முதல்வர் புறப்பட்டு கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு அவர் ஆய்வு செய்தார்.

அதன் பின்னர் கடலூர் அண்ணா திடலில் தரையிறங்கி அருகில் உள்ள கல்யாண மண்டபத்தில் நடந்த நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.



அங்கு உயிரிழந் தோர் குடும்பங்களுக்கு ரூ. 2 இலட்சம் ரூபாவும் குடிசை வீடுகளை இழந்தோருக்கு நிதியுதவி உள்ளிட்டவற்றை வழங்கினார்.

பின்னர் புயல் பாதிப்பு குறித்து மக்கள் யாரும் கவலைப்படக்கூடாது. உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது. அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் நல் வாழ்த்துக்கள் என்று வாழ்த்தினார்.

# சசிகலா மீதான விசுவாசத்தால் பறிபோனது துணைமேயர் பதவி

(கோவை)



சசிகலா மீதான விசுவாசத்தாலும், சசிகலாவின் உறவினரான ராவணன் மீதான விசுவாசத்தாலும் கோவையைச் சேர்ந்த சின்னத்துரை. தனது துணை மேயர் பதவியை இழந்துள்ளார். கட்சி மேலிடத்திலிருந்து வந்த உத்தரவைத் தொடர்ந்து சின்னத்துரை தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

சென்னையில் சமீபத்தில் நடந்த அ.தி.மு.க பொதுக் குழுக் கூட்டத்தின் போது சின்னத்துரையை அழைத்து ராஜினாமா கடிதம் கொடுக்குமாறு உத்தரவிடப்பட்டது. இதையடுத்து அவரும் தனது ராஜினாமாவை, சசிகலாவின் தீவிர எதிர்ப்பாளர்களில் ஒருவரான கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலையில், கோவை மேயர் வேலுச்சாமியிடம் ஒப்படைத்தார்.

அவரும் உடனடியாக மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பி வைத்தார். அவர் மாநில தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி உடனடியாக ராஜினாமா ஏற்கப்பட்டது.

# தலிபான்களுடன் பேசுவதற்கு கட்டாரில் இணைப்பு அலுவலகம்

உலகச் செய்திகள்



ஆப்கானிஸ்தான் அரசுக்கும், தலிபான்களுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தையில் கட்டாரில் இணைப்பு அலுவலகம் ஒன்றை அமைப்பது பற்றிய தலிபான்களின் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையில் கடந்த 10 மாதங்களாக அமைதிப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. தற்போது தான் இது முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது. அதன்படி இருதரப்பிலான பேச்சுவார்த்தை தொடரக் கட்டாரில் இணைப்பு அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற தலிபான்களின் கோரிக்கையை ஆப்கான் அரசு ஏற்றுள்ளது.

சவூதி அரேபியா அல்லது துருக்கியில் அந்த அலுவலகத்தை அமைக்கலாம் என்ற அரசின் பரிந்துரையை தலிபான்கள் நிராகரித்து விட்டனர். மேலும் குவான்டனமோ சிறையில் உள்ள தலிபான்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும், தலிபான்கள் முன்வைத்துள்ளனர். ஆனால் அமெரிக்கா அவர்களை ஆப்கான் அரசிடம் ஒப்படைப்பது குறித்து ஆலோசித்து வருகிறது.

# ஈரான் அணுசக்தி நிலையங்கள் குண்டுத் தாக்குதல்களால் அழியும்

## அமெரிக்க குடியரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் எச்சரிக்கை



ஈரானின் அணுசக்தி நிலையங்களை குண்டு வீசி அழிப்போம் என்று அமெரிக்க குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ரிக்சன்டோரம் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது குடியரசுக்கட்சி வேட்பாளர் ரிக் சன்டோரம் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறுகையில், நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தி அழிப்பேன். எனது கண்காணிப்பில் ஈரான் எந்த அணு ஆயுதத்தையும் தயாரிக்க முடியாது என்றார். ஈரான் ரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதாக அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. ஐ.நா. உட்பட பல நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன. எனினும் ஆயுதங்கள் தயாரிக்கவிலலை. என ஈரான் கூறிவருகின்றது.

# அணுவாயுத பேச்சுக்குத் தயார் ஈரான் அரசாங்கம் அறிவிப்பு

(தெஹ்ரான்)

அணு ஆயுதங்கள் தயாரிப்பு விவகாரம் குறித்த பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

அணுமின் நிலையங்களுக்காகத் தான் அணுசக்தியைப் பயன்படுத்துவதாக ஈரான் கூறிவந்தாலும், அணு ஆயுதத் தயாரிப்பில் அந்நாடு ஈடுபடுவதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இதன் காரணமாக, ஈரான் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை அந்நாடுகள் விதித்துள்ளன. இதற்கிடையில், ஈரான் ஏவுகணைப் பரிசோதனைகளை நடத்தி மேற்குலகத்தை மிரட்டியுள்ளது. அதனால், ஈரானைப் பணிய வைக்க மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிக்க மேற்குலகம் தயாராகி வருகிறது. இந்நிலையில் அணு ஆயுதத் தயாரிப்பு குறித்த பேச்சுவார்த்தைக்குத் தயார் என ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மேமன் பரஸ்ட் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில், ஐரோப்பிய யூனியன் கொள்கைப் பிரிவுத் தலைவரைச் சந்திப்பதற்கு கேத்ரீன் ஆஷ்டனின் திகதி மற்றும் இடம் குறித்த அறிவிப்புக்காகக் காத்திருக்கிறோம். அவரது அறிவிப்பு வெளியானவுடன், ஈரான் தேசிய பாதுகாப்புக் குழுச் செயலர் ஜலீலி, தனது முடிவுகளை அறிவிப்பார். தொடர்ந்து ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் என்றார்.

# வழிபாட்டுத் தலங்களில் குண்டு வீசியவர் கைது

(நியூயோர்க்)

நியூயோர்க் பகுதியில் இந்து வழிபாட்டு தலம், இஸ்லாமிய அறக்கட்டளை, பல்பொருள் அங்காடி உள்ளிட்ட 4 இடங்களில் குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக நியூயோர்க் பொலிஸாரால் விசாரணை நடத்தப்பட்டது. நேரில் பார்த்தவர்களின் சாட்சிகளின் மூலமும் கண்காணிப்பு கமராவில் பதிவாகியிருந்த கார் எண்ணை வைத்தும் குற்றவாளியைக் கண்டு பிடித்து கைது செய்துள்ளனர். குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ள 40 வயதுள்ள அந்த நபர், நியூயோர்க் நகரத்தை சேர்ந்த அமெரிக்கராவார்.

# கைது செய்வதைத் தடுப்பதற்கு சவுதியுடன் பேசவுள்ள முஷாரப்

(இஸ்லாமாபாத்)

இந்த மாத இறுதியில் நாடு திரும்ப முடிவு செய்துள்ள, பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப், பாகிஸ்தான் அரசு மற்றும் இராணுவம், தன்னை கைது செய்வதைத் தடுப்பதற்காக, சவூதி அரேபிய மன்னரைச் சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் அடுத்தாண்டு பொதுத் தேர்தல் நடக்க உள்ளது. அதில் போட்டியிடப் போவதாக அறிவித்த முஷாரப், இந்தாண்டு மார்ச்சில் வருவதாக முதலில் தெரிவித்தார். பின்னர் பெப்ரவரியில் வரப் போவதாக அறிவித்தார். சமீபத்தில் அறிக்கை வெளியிட்ட அவர், இம்மாத இறுதியிலேயே, பாகிஸ்தான் திரும்ப முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார். இந்நிலையில், அவர் நாடு திரும்பிய பின் அவர் மீதான வழக்கின் அடிப்படையில், அவரை அரசு மற்றும் இராணுவம் கைது செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்த கைது நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக, இம் மாதம் 22 ஆம் திகதி, சவூதி மன்னர் அப்துல்லாவை, முஷாரப் சந்திக்க திட்டமிட்டுள்ளார். பாகிஸ்தான் உள்நாட்டு அரசியலில், சவூதி அரேபியா நடுவராக பணியாற்றி வருவதால், அந்நாட்டின் மன்னர் மூலம், தன் மீதான வழக்கின் அடிப்படையில் கைது நடவடிக்கைகள் இருக்காது என்ற உறுதியை, அதிபர் சர்தாரி மற்றும் இராணுவத் தளபதி கயானி ஆகியோரிடமிருந்து பெறுவதற்காக இந்தச் சந்திப்பை, அவர் ஏற்பாடு செய்துள்ளார். அமெரிக்காவில் வசிக்கும் பாகிஸ்தானி தொழிலதிபர் ரஜா புகாரி, முஷாரப்பின் மிக நெருங்கிய வட்டாரத்தைச் சேர்ந்தவர். அவர், இது குறித்து அமெரிக்க அதிகாரிகளை விரைவில் சந்தித்துப் பேச உள்ளார். முஷாரப் தனது கைது நடவடிக்கை தவிர்க்கப்பட்டதாக, உத்தரவாதம் பெற்றபின் தான் நாடு திரும்பும் திகதியை அறிவிக்க உள்ளார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

பொதுவானதாக, சுதந்திரமானதாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் நிறுவனங்களின் செயற்பாடுகளை விமர்சித்து அதன்மூலம் அதனுள் எளிதில் புலப்படாவண்ணம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் வன்முறையை வெளிப்படுத்துவதுதான் இன்றைக்கு உண்மையான அரசியல் இலக்காக இருக்க முடியும்.
**– மிஷேல் ஃபூக்கோ**

இலக்கின்றி ஏவப்படும் வன்முறைக்கு அப்பாவிகள் பலியாகும்போது பொது அமைதி கெட்டுவிட்டதென்ற அபிப்பிராயம் மக்களுக்கு ஏற்படுகிறது. இதன் விளைவாக உண்டாகும் பாதுகாப்பற்ற உணர்வு அரச அதிகாரத்தை மேலும் மேலும் சார்ந்திருக்கும் நிலைக்கு அவர்களைத் துரத்துகிறது. நம்மைப் பொலிசும இராணுவமும் காப்பாற்ற வேண்டுமென நாம் கூக்குரலெழுப்புகிறோம். ஆக, இலக்கற்று வன்முறையை ஏவும் பயங்கரவாதச் செயல்கள் அரசின் வலிமையைக் குறைப்பதில்லை. மாறாக அதை அதிகப்படுத்தவே உதவுகின்றன. அரசு மேலும் மேலும் தனது ஒடுக்குமுறை நிறுவனங்களைப் பலப்படுத்திக் கொள்வதை அவை ஊக்குவிக்கின்றன. அதிகாரங்கள் மையத்தில் குவிக்கப்படுவதை, “வலிமையான அரசின்” தேவையை முன்னிறுத்தி வரவேற்கும்படி செய்துவிடுகின்றன. அரசு உறுதியாக இருக்க வேண்டும். அது நம்மைத் திறம்பட அடக்கியாள வேண்டுமென்று நாமே விரும்பிக் கேட்கிற நிலைக்கு ஆளாக்கப்படுகினறோம். பாதுகாப்பு என்பதன் பேரில் அடக்குமுறைக்குக் கையேந்தும் நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம். உயிரைப் பற்றிய அச்சத்தின் காரணமாக ஒடுக்குமுறையை விரும்பி ஏற்கும் இத்தகைய மனோநிலைதான் பாசிசத்தின் அடித்தளமாக இருக்கிறது. இது பொதுப்பத்தியைத் (commonsense) தீர்மானிப்பதாக ஆகிவிடும் பட்சத்தில் அங்கு பாசிசம் எளிதில் வெற்றியடைந்து விடுகிறது.
**– ரவிக்குமார்**

நிறுவப்பட்ட ஏதொன்றும் தன்னை இயற்கையானது என நம்பும்போது அல்லது முன்னிலைப்படுத்திக் கொள்ளும்போது அது வன்முறையாக அமைகிறது. இது எல்லா நிறுவனங்களுக்குமே பொருந்தும். மொழி, இனம், வர்க்கம், சாதி, பால், மரபினம் என எல்லாமே நிறுவப்பட்டவைகள்தான; இவற்றில் எதுவும் இயற்கையானதல்ல. ஆனால் இவை தாம் நிறுவப்பட்டதை மறைத்துக் கொண்டு இயற்கையானவை எனவும், சாராமசப் பண்புகள் கொண்டவை எனவும் வலியுறுத்தி, இவற்றை அடித்தளங்களாகக் கொண்டு, அடையாளங்களைக் கட்டமைத்து அரசியல் களத்தில் இறங்கி அதிகாரத்தைக் கோரும்போது அது வன்முறையாக வெளிப்படுகிறது. சுருக்கமாகச் சொல்வதானால் நிறுவப்பட்ட எதுவும் தன்னை இயற்கையானதாக அறிவிக்கும்போது நிகழ்வது வன்முறை.
**– அ.மார்க்ஸ்**

‘ஆண்டான் – அடிமை’ என்னும் உறவு, கால ஓட்டத்திற்கேற்றபடி சொல்லாட்சியிலும் அமுலாக்கத்திலும் சில மாற்றங்களைப் பெற்றிருக்கலாமே தவிர, மனோபாவத்தில் அப்படியேதான் கிணற்றில் போட்ட கல் மாதிரி பிசுக்கேறிக் கிடக்கிறது. அடக்குகிறவனின் சந்தோஷமே அடங்குகிறவனின் கதிமோட்சம் என்பதில் ஐயத்திற்கிடமில்லாத வரை காலம் பொற்காலம் தான். கடவுள் கருணையுள்ளவர்தான். நம் வரலாற்றின் பொற்காலங்கள் யாவும் வேறெப்படி வகைப்படுத்தப்பட்டன என்கிறீர்கள்!
**– கவிதாசரண்**

கடவுள் இருக்கிறார் என்று ஒருவனுக்குத் தெரிகிறதென்று வைப்போம். நம்பிக்கையை இல்லை நான் சொல்வது, அப்படி நிச்சயமாகவே தெரிகிறதென்று வைப்போம். அப்படித் தெரிய முடியுமானால் அப்படிப்பட்டவன் religious ஆவது பெரிய விஷயம் தானே, வங்கியில் பணம் வைத்திருப்பது போல். வட்டி உத்தரவாதம். ஆனால் கடவுள் இருக்கிறாரோ இல்லையோ என்று சந்தேகம் இருப்பவன் கடவுளை நம்பும் தீர்மானம் எடுப்பது இருக்கிறதே, அது நிஜமான ஒரு சவால். அப்படியே... அரசியலில் நம் போராட்டத்தின் மூலம் முன்னேற்றம் வரும்; இந்த முன்னேற்றத்திலிருந்து எல்லா நல்லதும் மிக எளிதாக வந்துவிடும் என்று தெரிந்துகொண்ட ஏழைகளின் பக்கம் நின்று புரட்சிக்குச் செயல்படுவது ஒரு முறை. சனங்களின் வழிமுறை அது... நாம் கொண்டுவரும் முன்னேற்றம் எல்லாம் நல்லதையே செய்யும் என்று நம்ப முடிகிறதோ இல்லையோ, சுற்றியுள்ள சிறுமைகளுக்கும் துக்கங்களுக்கும் எதிராய்ப் போராடுவது தேவை என்பது மட்டும் தெளிவாய்ப் புரிகிறது.
**– அவஸ்தை நாவலில்**

ஜனநாயகம் என்பது நாளையே எல்லாவற்றையும் குணப்படுத்திவிடக் கூடிய அதிசய மூலிகை என்று சொல்ல முடியாது. ஆனாலும், நமது மக்களிடையே அடைபட்டுக் கிடக்கும் சக்திகளை அது நிச்சயமாக விடுவிக்கும். **– ஒக்டோவியோ பாஸ்**



# தமிழ் அரசியலில் “துரோகிகள்” என்ற பதத்தை அறிமுகப்படுத்தியவர்கள் யார்?

## – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய நாளிதழுக்கு அளித்த பேட்டியிலிருந்து

**கேள்வி:** டக்ளஸ் தேவானந்தா, கருணா போன்றவர்கள் எல்லோரும் இனத்துரோகிகள் என்று தமிழகத்தில் பிரசாரம் செய்யப்படுகிறது. பிரபாகரனுக்கு, இலங்கைத் தமிழர்களுக்கு நீங்கள் துரோகம் செய்தீர்களா?

**பதில்:** கருணா என்று நீங்கள் கூறும் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் பற்றி அவரிடமே கேட்பது நல்லது. இலங்கைத் தமிழர் அரசியலில் துரோகிகள் என்ற சொற்பதத்தை அறிமுகப்படுத்தியவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை.

தமது அரசியல் எதிரிகளை துரோகிகள் என வரையறுத்த கூட்டமைப்புத் தலைவர்கள், துரோகிகளுக்கு இயற்கை மரணமில்லையென மேடைகளில் முழங்கி வந்தார்கள். இவர்களது மயிரக கூச்செறியும் பேச்சுக்களுக்கு எடுபட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் தமிழ்த் தலைவர்களால் துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டவர்களைச் சுட்டுத் தள்ளினார்கள்.

பிற்காலத்தில் அவ்வாறு கூறிய தமிழ் தலைவர்களும் துரதிர்ஷ்டவசமாக சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்களும் அநேகம். அடுத்ததாக துரோகம் என்பதன் அர்த்தம்தான் என்ன?

நாடாளுமன்றத்திலே தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வொன்று வரும் பட்சத்தில், அதற்கு எதிராக வாக்களித்தாலோ அல்லது அதை குழப்பியடித்தாலோ... அதுதான துரோகமேயன்றி வேறொன்றுமில்லை. இதைச்செய்தவர்கள் யார்? தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும், புலித் தலைவர்களும்தான் செய்திருக்கின்றாரகள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் புலித் தலைமையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், அல்லது அதனை ஏற்றுக் கொண்டவர்களால், அது சரியான முறையிலே கையாளப்பட்டிருந்தால், அல்லது சந்திரிகா அம்மையாரினால் கொண்டு வரப்பட்டிருந்த தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவளித்து அதை நடைமுறைப்படுத்த ஏனைய தமிழ் தலைமைகள் உதவியிருந்தால், ஆயிரக் கணக்கான உயிர்களைக் காப்பாற்றி இருக்க முடியும். தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்களின் அழிவிற்கு காரணமாக இருந்திருக்கிறது. எமது மக்களின் உயிர்கள் அநியாயமாகப் பலியாகிவிடாமல் பாதுகாக்க வேண்டுமேயன்றி பலி கொடுத்து விட்டு மக்களின் அழிவில், அவலத்தில் அரசியல நடத்துபவர்கள்தான் உண்மையான துரோகிகள்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலகட்டத்தில் தம்மில் 652 உறுப்பினர்கள் மட்டுமே மரணித்திருந்ததாக புலிகள் அன்று உரிமை கோரியிருந்தனர். ஆனாலும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து தொடர்ந்தும் அழிவு யுத்தத்தில் புலிகள் ஈடுபட்டிருந்ததால் 2009 மே 18ஆம் திகதி வரையில் புலிகள் அமைப்பில் இருந்து கொல்லப்பட்டவர்களின் தொகை முப்பதினாயிரத்திற்கும் அதிகமானது என கணிப்பிடப்பட்டுள்ளது. அதைவிட கொல்லப்பட்ட அப்பாவி மக்களையும் கருத்தில் எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாது சொத்து இழப்புகள், பொருளாதாரப்பின்னடைவுகள், கலாசார சீரழிவுகள், மன உளைச்சல்கள், உடல் உறுப்புக்களை இழந்தவர்கள், கணவர்மாரை இழந்தவர்கள் போன்றவர்கள் குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த அழிவுகளுக்கு யார் பொறுப்பு..? ஆகவே இங்கு யார் துரோகிகள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த போது அரசியல் தீர்வு குறித்து புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களோடு நேரில் பேசி தீர்வு காண விரும்புவதாக அறிவித்திருந்தார். ஆனால், அந்தச்சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்த விரும்பாத புலிகள், எமது மக்களைப் பலி கொடுக்கும் அழிவு யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆகவே இதில் யார் துரோகிகள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் அழிவு யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், வடக்கு நோக்கியும் தமது நடவடிக்கையினை படையினர் ஆரம்பிக்க எண்ணியிருந்தனர். அப்போது எமது மக்களை முன் கூட்டியே அழிவில் இருந்து காப்பாற்ற எண்ணி, நான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரோடு பல தடவைகள் பேசியிருந்தேன். ஜனாதிபதியோடு பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் இந்த அழிவு யுத்தத்தை தடுத்து நிறுத்த முடியும் என்றும், இதற்கு ஜனாதிபதி விருப்பம் கொண்டுள்ளார் எனவும் தெரிவித்து நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தேன். ஆனாலும அவர்கள் அதற்கு உடன்பட்டு வந்திருக்கவில்லை. அதன் பின்னரே படை நடவடிக்கையின் மூலம் அழிவு யுத்தம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது.

இதில் யார் துரோகிகள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவே தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றவர்களும், அதற்கு துணைபோனவர்களும்தான் துரோகிகளேயன்றி எந்தவொரு மனித உயிரும் அநியாயமாகப் பலியாகிவிடக் கூடாது என்பதில் மிகவும் பொறுப்புடனும் அக்கறையுடனும் செயற்பட்டுவரும் நாமல்ல துரோகிகள். வியாபார நோக்குடனும் குறுகிய அரசியல் நோக்குடனும் செயற்பட்டு வரும் சில தமிழ் ஊடகங்களினால் ஒரு காலத்தில் நாம் துரோகிகள் என வர்ணிக்கப்பட்டோம். தமிழகத் தலைவர்கள் எனக் கூறிக் கொள்ளும் சிலரும் அறிந்தும், அறியாமலும் இதற்கு துணை போனார்கள்?

ஆனால், வசந்தகாலம் வந்து விட்டது. காக்கைக்கும் குயிலுக்கும் வித்தியாசம் தெரியவந்துள்ளது. உயிரையே துச்சமென மதித்து மக்களுக்காக மக்களுடன் சேவை செய்தவர்கள் யார்? மக்களின் அழிவில் அரசியல் பிழைப்பு நடாத்துபவர்கள் யார்? என்பதை மக்கள் இப்போது, இனங்கண்டு வருகின்றனர். இதனால்தான் ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாக மக்கள் எம்மை தமது பிரதிநிதிகளாக தொடர்ந்து தெரிவு செய்து வருகின்றனர். தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடையே அதிகூடிய விருப்பு வாக்குகளை வழங்கி, கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் என்னைத் தெரிவு செய்தும் உள்ளனர்.

**கேள்வி:** தனி ஈழத்துக்குப் போராடியவர்களின் வரலாற்றை மறைக்கும் விதமாக இலங்கை அரசு செயற்படுவதாக கூறப்படுகிறதே? நினைவிடங்கள் பல அழிக்கப்பட்டுவிட்டதே?

**பதில்:** நானும் ஒரு காலத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவன்தான். புலிகள் பல தடவைகள் என்னை கொலை செய்ய முயன்றார்கள். என்றாலும் எனது வரலாறு யாராலும் அழிக்கப்படவில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னரான சூழலில் நடைமுறை யதார்த்தங்களை உணர்ந்து அரசாங்கத்தின் உறவுக்குக் கரம் கொடுத்து தமிழ் மக்களின் உரிமைக்கும் குரல் கொடுத்து வருகின்றேன்.

இதை யாரும் தடுக்கவில்லையே. இது தவிர ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் தோழர் பத்மநாபா, ரெலோ தலைவர் ஸ்ரீசபாரத்தினம் போன்றவர்கள் ஆயுதப் போராட்ட வழியிலும், தேசியத் தமிழ்த் தலைவர் அமிர்தலிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம் மற்றும் யோகேஸ்வரன் போன்றவர்கள் அஹிம்சை வழியிலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவே போராடியிருந்தார்கள். புலிகளால் கொன்றொழிக்கப்பட்ட இவர்களைப் போன்ற இன்னும் பலருக்கு தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நினைவுச் சிலைகளை அமைப்பதற்கு புலிகள் அனுமதித்திருந்தார்களா? இல்லையே. இந்த நியாயங்கள் கூட ஏற்றுக் கொள்ளப்பட முடியாத போது நீங்கள் கூறும் இது மட்டும் எப்படி சாத்தியமாகும்...?

**கேள்வி:** இந்தியா பலகோடி ரூபா செலவில் இலங்கைத் தமிழர்களுக்கு கட்டிக் கொடுத்த வீடுகள் தரம் இல்லாமல் உள்ளதாகவும் அவற்றில் குடியேற முடியாத நிலையில் மக்கள் உள்ளதாகவும் கூறப்படுகிறதே?

**பதில்:** யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டமானது, நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்கு வருகை தந்திருந்த வேளையில், மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களும நானும் கலந்துரையாடியதன் விளைவாக உருவாக்கப்பட்ட திட்டமாகும். பின்னர் இத்திட்டம் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டு, பிரதமர் மன்மோகன் சிங்கால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அறிவிக்கப்பட்டதற்கு எனது பங்களிப்பு பிரதானமாக இருந்தது என்பதையும் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றேன். அத் திட்டத்தின் முன்னோடி நடவடிக்கையாக ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணி இந்திய அரசால் இந்திய ஒப்பந்தக்காரர்களிடம் வழங்கப்பட்டிருந்தது. இப்பணிகளில் ஏற்பட்ட தாமதங்களும் குறைபாடுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தன.

அண்மையில் சார்க் உச்சி மாநாட்டுககாக நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மாலைதீவு சென்றிருந்த வேளையில் இலங்கை ஜனாதிபதிக்கும் இந்திய பிரதமருக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இவ் வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதன் போது ஒப்பந்தக்காரர்களின் மூலம் வீடுகளை அமைப்பதில் ஏற்படுகின்ற காலதாமதங்கள் குறித்து கவனத்தில் எடுக்கப்பட்டது. எனவே ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து இத் திட்டம் மீளப் பெறப்பட்டு பயனாளிகளிடம் நேரடியாக கையளிப்பதென்றும், மூன்று கட்டங்களாக பயனாளிகளுக்குப் பணம் வழங்கப்படுவதோடு மேலதிகமாக பயனாளிகளும் தங்களால் இயன்ற பணத்தை செலவு செய்து தமது விருப்பத்திற்கு ஏற்றவகையில் வீடுகளை அமைத்துக் கொள்ள முடியும் எனவும் தீர்மானிக்கப் பட்டது.

**கேள்வி:** தமிழக அரசியல் தலைவர்களையும் இலங்கைத் தமிழர்களுக்கான போராட்ட அமைப்புக்களையும் இலங்கைத் தமிழர்கள் நம்பிக்கையோடு பார்க்கிறார்களா? தமிழகத்தில் இருந்து அவரகள் எதிர்பார்ப்பது என்ன?

**பதில்:** தமிழகம் ஈழத்தமிழர்களின் வேரடி மண் இதை யாராலும் மறுக்க முடியாது. இலங்கையில் இருந்து திட்டமிட்டு பரப்பப்படும் தவறான கருத்துக்களை வைத்து எதையும் தீர்மானிப்பது சரியானது அல்ல. நோய் தீர அதற்கு வைத்தியம் தேவை. தொடர்ந்தும் நோயை மட்டும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஈழத்தமிழர்கள் கோமா நிலையில் இருந்து, அதாவது மரணப் படுக்கையில் இருந்து மீண்டு வந்திருக்கிறார்கள். இதுவரை துயரங்களையும் அவலங்களையும் சுமந்து வந்த இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு கௌரவமாகவும் தொடர்ந்தும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு ஏற்றவகையான பங்களிப்பை தமிழக உறவுகள் வழங்க வேண்டும் என்பதே எமது மக்களின் எதிர்பார்ப்பாகும். இதில் தமிழக அரசியல் தலைவர்களும், ஈழத்தமிழர்களுககான ஆதரவு அமைப்புகளும் நடைமுறை சார்ந்து சிந்திக்க வேண்டியது கடமையாகும்.

ஈழத்தமிழர்கள் விரும்புவது அரசியல் பழிவாங்கல்களை அல்ல. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னரான அழிவுகளுக்கு, கிடைத்திருந்த பல்வேறு சந்தர்ப்பங்களையும் தவற விட்ட சில தமிழ் அரசியல் தலைமைகளும் பொறுப்பை ஏற்க வேண்டும். அப்படி பார்த்தால் யாரை யார் பழிவாங்குவது? உணர்வு பூர்வமாக சிந்தித்து நொந்து தவித்த தமிழ் மக்களின் வாழ்வில் நிரந்தர மகிழ்ச்சியை உருவாக்குவதே நோககமாக இருக்க வேண்டும்.

அற்றைத்திங்கள்
அவ்வெண்நிலவில் எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய வாழ்வு இங்கு திரும்ப வேண்டும். அது சமவுரிமையோடு கூடியதாக இருக்க வேண்டும். கனிந்திருக்கும் இந்த நல்லதொரு சூழலை நாம் முன்னோக்கி செல்லப் பயன்படுத்த வேண்டும். வன்முறைகள் இனி இங்கு வேண்டாம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் முயற்சிகளுக்கு தமிழ் நாட்டு உறவுகள் குரல் கொடுக்க வேண்டும். சகலரும் ஈழத்தமிழர்களின் உண்மையான கருத்துக்களையும், விருப்பங்களையும் சரிவர அறிந்து கொள்ளவும் வேண்டும்.

**கேள்வி:** தமிழ் ஈழம் பிறக்கும் என்ற நம்பிக்கை இன்னமும் உங்களிடம் இருக்கிறதா? ஈழத்தமிழ் மக்கள் நம்புகிறார்களா?

**பதில்:** அதற்கான சாத்தியமில்லை என்பதை வரலாறு நிரூபித்துவிட்டது. அதற்கென நடத்தப்பட்ட போராட்டம் அழிவு யுத்தமாக மாற்றப்பட்டதால் தமிழ் மக்களுக்கு வதைகளையும் வலிகளையும் வாங்கி தந்ததுதான் மிச்சம். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தோடு ஆயுதப் போராட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். அன்றைய எமது நீதியான ஆயுதப் போராட்டம்தான் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை உருவாக்கியும் தந்திருந்தது. அதற்காக நாமும் அர்ப்பணங்களோடு போராடியிருக்கின்றோம். இந்த ஒப்பந்தம் புலிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் அல்லது அதை ஏற்றுக் கொண்டவர்களால், அது சரியாக நடைமுறைப்படுததப்பட்டிருந்தால், ஈழத் தமிழர்கள் இன்று சுயநிர்ணய உரிமையை நடைமுறையில் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் அது நடக்கவில்லை என்பதே துயரம். தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் சம உரிமையோடு வாழ்வதையே விரும்புகின்றார்கள். தமிழர்களாக இருப்பதற்காக இலங்கையர்கள் என்ற அடையாளத்தையோ, அன்றி இலங்கையர்களாக இருப்பதற்காக தமிழர்கள் என்ற அடையாளத்தையோ ஈழத் தமிழ் மக்கள் இழப்பதற்கு ஒரு போதும் தயாராக இல்லை. ஆகவே தமிழர்களாகவும் இலங்கையரகளாகவும் இருக்கவே இங்குள்ள தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள்.

# மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் பலம்பொருந்திய நாடாளுமன்ற உறுப்பினர்

## சந்திரகுமார் எம்.பி.க்கு புகழாரம்



(கிளிநொச்சி)

மக்களின் சில முக்கிய தேவைகளை நிவர்த்திசெய்யும் விடயத்தில் அரசியல் பலம் முக்கியத்துவம் வகிக்கின்றது அந்தவகையில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அரசியல் பலம் பொருந்தியவர் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் என கிளிநொச்சி மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அழகாபுரி கிராமத்தில் நடைபெற்ற கிளிநொச்சி கரைச்சி கிழக்கு நன்நீர் மீன்பிடிச் சங்கத்தினருடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

புதிதாக பதிவு செய்யப்பட்ட கரைச்சி கிழக்கு நன்நீர் மீன் பிடிச் சங்கத்தினருக்கான வள்ளங்களையும் வலைகளையும் நாம் விரைவாக வழங்கவுள்ளோம். அதேவேளை, இரணைமடுக் குளத்தின் கிழக்குக் கரையில் இச்சங்க மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கும் நாம் முயற்சித்து வருகின்றோம். இருப்பினும் மக்களின் சில முக்கிய தேவைகளை நிவர்த்தி செய்யும் விடயத்தில் அரசியல் பலம் முக்கியத்துவம் வகிக்கின்றது. அந்தவகையில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அரசியல் பலம் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரிடம் உள்ளது அப் பலத்தினை அவர் சரியாக பயன்படுத்தி எம்மக்களின் தேவைகளை நிவர்த்திசெய்து வருகின்றார். இந்நிலையில்

இரணைமடுக்குளத்தின் முழுமையான பகுதியிலும் மீன்பிடியினை மேற்கொள்வற்கான அனுமதியினை நாம் கோரியுள்ளோம் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஈடுபட்டுள்ளார். எனவே இப்பகுதி மீனவர்களும் மிக விரைவாக தொழிலை ஆரம்பிக்க முடியும். என பிரதித்திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கரைச்சி கிழக்கு நன்நீர் மீன்பிடி சங்கத்தின் பயனாளிகளுக்கான உதவித்திட்டங்களை வழங்குவது தொடர்பாக நடைபெற்ற இக் கலந்துரையாடலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத்துறைவிரிவாக்க அலுவலர் திலீபன், நீரியல்வளத்துறையின் மாவட்டஅலுவலர் சலீபன், ஆகியோரும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர், மற்றும் அப்பகுதி கிராமசேவையாளரும் கரைச்சி கிழக்கு நன்நீர் மீன்பிடி சங்கத்தின் தலைவர் செயலாளர் உட்பட அங்கத்தினரும் கலந்து கொண்டனர்.

# மதுவரித் திணைக்களத்துக்கு 4 உத்தியோகத்தர்கள் நியமனம்

கடந்த காலங்களில் மிகவும் குறைந்த ஆளணியுடன் இயங்கிய யாழ்.மதுவரி நிலையத்திற்கு நான்கு புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் பரிசோதகரும், 3 அலுவலர்களும் வெளி மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு இடம் மாற்றப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதனால் மதுவரி நிலைய மனிதவளம் அதிகரித்துள்ள நிலையில் இனிவருங்காலங்களில் அதிக வினைத்திறனுடன் சேவையாற்ற முடியும் எனத் தாம் நம்புவதாக மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி நா.கிருபாகரன் தெரிவித்தார். (எஸ்)

# அமைச்சர் பந்துல யாழ். விஜயம்

(பருத்தித்துறை)

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெிவித்துள்ளன.

அன்றைய தினம் வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் வைபவத்தில் கலந்து கொள்ளும் முகமாகவே அமைசசர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.(109)

# தொடரும் டெங்கு அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் மீண்டும் வேகமாகப் பரவக்கூடிய ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது. முக்கியமாக அளவெட்டி வடக்குப் பகுதியில் அதிக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவே அளவெட்டிப் பகுதிக்குத் தேவையற்ற வகையில் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பிராந்திய தொற்று நோயியலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். அத்துடன் டெங்குக் காய்ச்சல் தொடர்பில் மக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில் மட்டும் பலர் டெங்கு நோயினால் பாதிக் கப்பட்டுள்ளதுடன், இரண்டு பேர் இறந்துள்ளனர். தற்போது பரவுகின்ற டெங்கு நோயினால் மிகவும் அதிகளவான மரணங்கள் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. டெங்கு நோயிலிருந்தும், இதனால் ஏற்படப்போகும் மரணங்களிலிருந்தும் எம்மைப் பாதுகாத்துக்கொள்வது எமது கைகளிலேயே தங்கியுள்ளது. இதற்கான வழிமுறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

எமது சுற்றாடலில் டெங்கு நோயினைப் பரப்பக்கூடிய நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகும், ஓய்வெடுக்கும் இடங்களை இல்லாதொழித்து நுளம்புகள் பெருகாமல் பாதுகாப்பதே டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான இலகுவான வழிமுறையாகும்.

உங்களுக்கோ அல்லது வீட்டிலுள்ள எவருக்கேனும் காய்ச் சல் அல்லது உடல் அசௌகரியம் ஏற்பட்டால் உடனடியாகவே தகுதியான வைத்தியரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள். சில வேளைகளில் கடுமையான காய்ச்சலின்றியும் டெங்கு நோய் ஏற்படலாம்.

நீங்கள் கொழும்புக்குச் சென்று வந்த பின் அல்லது உங்களது வீட்டுக்கு அல்லது அயலில் எவராவது கொழும்பிலிருந்து வந்து தங்கிச் சென்றபின் காய்ச்சல் ஏற்பட்டால் அது டெங்குவாக இருக்கலாம். தகுந்த மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். அத்துடன் அவசியமற்ற கொழும்புப் பயணங்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

டெங்குவென சந்தேகிக்கக் கூடியதான காய்ச்சல் ஏற்பட்டால் உரிய சிகிச்சை பெறுவதுடன், ஒருவாரகால பூரண ஓய்வும் போதியளவு நீரா காரங்களைப் பருகுவதும் அவசியமானது. ஓய்வெடுக்காவிடின் திடீரென மரணமும் சம்பவிக்கலாம்.

எக்காரணம் கொண்டும் காய்ச்சலுக்கு சுயமாகவே மருந்து களை எடுக்க வேண்டாம். முக்கியமாக புருபன், அஸ்பிரின், டைக்குளோபெனக் சோடியம் போன்ற வலி நிவாரணிகளை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தேவைப்பட்டால் மாத்திரம் பரசிற்றமோல் வகை மாத்திரைகளைப் பாவிக்கவும்.

டெங்கு நோய்த்தடுப்பு தொடர்பில் உங்களது பிரச்சினைகள் தொடர்பாக உங்களது பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தாமதியாது தொடர்பு கொள்ளுங்கள் என்றும் பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## தஞ்சமடைந்த...

உறுப்பினர் ஜேம்ஸ் வோட்டன் தலைமையிலான குழுவினர் யாழ். ஆயரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இதன் போதே யாழ்.ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில், இலங்கையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். தமிழர் தரப்புடன் அரசு இதய சுத்தியுடன் பேசவேண்டும். தமிழ் மக்கள் அரசியல் தீர்வைத்தான் எதிர்பார் கிறார்கள். அவர்களது விருப்பமும் அதுவாகத்தான் இருக்கிறது.

கடந்த கால யுத்தத்தில் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களின் மனதில் அமைதியை ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு யுத்தத்தில் ஈடுபட்டவர்களிடம் இருக்கிறது என மேலும் தெரிவித்தார். இச்சந்திப்பின்போது, பிரித்தானியாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் வோட்டன், ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சின் அரசியல் விவகாரப் பணிப்பாளர் மக்ஸ்வெல் கீகெல், பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கிறிஸ் நொநிஸ, யாழ். மாவட்டச் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சுமார் அரை மணி நேரம் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது ஆயர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். அபி விருத்திப் பணிகள் முன்னெடுத் துச் செல்லப்படுகின்றது. இருந்தும் மக்களுக்கான அரசியல் தீர்வு அவசியம் அது தமிழ் மக்களின் தேவையும் கூட இதனை அரசு தமிழ்மக்களுக்கு முன் வைக்க வேண்டும்.

நான் அரசியல்வாதியல்ல சமயத்தலைவனே எனது அவதானிப்பின் பிரகாரம் தமிழ் மக்களின் முக்கிய தேவை இதுவாகவே இருக்கின்றது எனவும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த இக் குழுவினர் தமது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று முற்பகல் 11.00 மணியளவில் கொழும்பு திரும்பினர். (பா)

## தெரிவுக்குழுவில்...

தரும்படி அரசு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை தமது பெயர்ப்பட்டியலை சமர்ப்பிக்காமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

எனவே அரசு கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் பங்குகொள்ள வைக்கும் முகமாக, தமது கட்சியின் சார்பில் தெரிவுக்குழுக்கு பெயர்களைக் கூட்டமைப்பு சமர்ப்பிக்கும் வரை கூட்டமைப்புடன் அரசு பேச்சுக்களை நடாத்துவதில்லை என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

## கூட்டமைப்பு...

கிடைத்த அழைப்பை ஏற்று இத்தூதுக்குழு அங்கு சென்றுள்ளது.

இக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி அளவில் நாடு திரும்புவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்.கல்வி...


யாழ்ப்பாணத்தின் உயர் கல்வித்துறையின் தற்போதைய நிலவரம் குறித்தும் ஜப்பானிய பல்கலைக்கழகம் தகவல்களைத் திரட்டி வருகிறது. இதற்காக ஜப்பானிய பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஃஇரோகோ ஃபுறுத் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல இடங்களுக்கும் சென்று மேற்படி தகவல்களைச் சேகரித்து சென்றுள்ளார். (எஸ்)

## சர்வதேச...

ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாமல் இருக்கும் நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் படையினரின் செயற்பாடுகள் குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு குறிப்பிட்ட விடயங்கள் ஏமாற்றமளிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுக்களை மூடி மறைப்பதனை விடவும், சர்வதேச ரீதியிலான விசாரணை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசிமானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு செய்துள்ள பரிந்துரைகளை அரசாங்கம் உடனடியாக அமுல்படுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## மீள்பரிசீலணை...

பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் தகவல்களை நளை நண்பகல் 12 மணிக்கு முன்னர் 0114 354 729 எனும் தொலைநகல் இலக்கத்திற்கு வழங்கு மாறும் மாணவர்களும் பெற்றோர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

## லலித், குகன்...

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை இன்று யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். காரியாலயத்திற்கு சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (பா)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த சர்வமத பேரவை வேண்டுகோள்



(கொழும்பு)

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையின் ஊடாக முன்வைத்துள்ள பரிந்துரைகளை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்வமத பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் இனப்பிரச்சினைக்கு அனைத்து மக்களும் உணரக்கூடிய மற்றும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வுத்திட்டத்தை அரசாங்கம் விரைவாக முன்வைக்கவேண்டும் என்றும் சர்வமத பேரவை தெரிவித்துள்ளது.

நாட்டில் யுத்தம் முடிந்துவிட்டாலும் யுத்தத்துக்கான காரணங்கள் இன்னும் உள்ளன. அவற்றை விரைவாகத் தீர்த்து வைக்க வேண்டும். அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 17 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். 18 ஆவது திருத்தச் சட்டம் வந்ததன் பின்னர் ஆணைக் குழுக்களின் சுயாதீனத்தன்மை இல்லாமல் போய்விட்டது என்றும் பேரவையின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கொழும்பில் நேற்று சர்வமத பேரவை நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அதன் பிரதிநிதிகளான மதத் தலைவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதங்களின் தலைவர்கள் சர்வமத பேரவையின் சார்பாக கருத்துக்களை வெளியிட்டனர்.

## போக்குவரத்துக்கு இடையூறு - ஐந்து பேருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கக்கூடிய வகையில் வியாபாரம் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட ஐவருக்கு நீதவான் நீதிபதி மா.கணேசராஜா தலா 1000 ரூபா தண்டம் விதித்ததுடன், எச்சரிக்கை செய்து விடுவித்தார்.

தென்பகுதி மற்றும் வண்ணார்பண்ணை பகுதியைச் சேர்ந்த குறித்த நபர்கள் வைத்தியசாலை வீதி, பெரிய கடை வீதிகளில் வியாபாரம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டு யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். (எப்.எஸ்)

## நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் 6 பேருக்கு நீதிமன்றம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

கடை, வீடுகளில் நுளம்பு பெருகக்கக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்ததாக குற்றம்சாட்டப்பட்ட 6 பேருக்கு தலா 1000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று குறித்த வழக்கை விசாரித்த நீதவான் நீதிபதி மா.கணேசராஜா சந்தேகநபர்களை எச்சரிக்கை செய்ததுடன் மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கினார்.

குற்றம்சாட்டப்பட்டவர்கள் ஆசீர்வாத வீதி, ஆடியபாத வீதி, மானிப்பாய், நல்லூர் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். மேற்படி நடவடிக்கையில் யாழ். மற்றும் கோப்பாய் பொலிஸார் ஈடுபட்டனர். (எப்.எஸ்)

## ஹாதி நீதிபதியிடம் முறையிடலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மஸ்ரஉத்தீன் மத்ரஸா பாடசாலை (புதுப்பள்ளி)யில் நாளை காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்டத்திற்கான ஹாதி நீதிபதி அல்ஹாஜ் ஏ.சி.மஜீத் வருகைதரவுள்ளார். இதன்போது விவாகரத்து, பிள்ளைகளின் தாபரிப்பு சம்பந்தமான வழக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வழக்குத் தாக்கல் செய்யவிருப்போர் திருமண அத்தாட்சிப் பத்திரம் அல்லது நிகாஹ் நடைபெற்ற அத்தாட்சிப் பத்திரம் அல்லது பொலிஸ் திருமண பதிவு ஆவணம், தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி, முத்திரைகள், பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதனை சமத்துவத்திற்கான யாழ். சிவில் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. (105)

## முஸ்லிம் ஆசிரிய உதவியாளர்கள் மீண்டும் வடமாகாணத்தில் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வசித்து இடம்பெயர்ந்து ஏனைய மாகாணங்களில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் வடமாகாண முஸ்லிம் ஆசிரிய உதவியாளர்களை மீண்டும் வடமாகாணத்திற்கு இணைப்பு செய்யப்படவுள்ளதாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

2007.07.11 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரம் மூலம் அனுமதிக்கப்பட்டு வடமாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட வடமாகாணத்தில் வசித்து தற்பொழுது இடம்பெயர்ந்து ஏனைய மாகாணங்களில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற முஸ்லிம் ஆசிரியர்களை வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை உரிய ஆசிரிய உதவியாளர்கள் விண்ணப்பப் படிவத்தினை அனுப்பிவைக்காதவர்கள் தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கும் வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி 'செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## மேலும் ஒரு புதிய மாடிக் கட்டடம் யாழ். போதனா மருத்துவமனைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் நோயாளர் விடுதிகளில் காணப்படும் இடநெருக்கடியினைப் போக்கும் முகமாக மேலும் ஒரு நான்கு மாடிக் கட்டடம் அமைப்பதற்கு சீன அரசாங்கத்துடன் பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராசா தெரிவித்துள்ளார்.

தற்சமயம் சிறுவர் சிகிச்சைப் பிரிவு அமைந்திருக்கும் பகுதி மற்றும் அதன் பின்புறமாகக் காணப்படும் பழுதடைந்த கட்டடங்கள் அகற்றப்பட்டு அப்பகுதியிலேயே இப்புதிய 4 மாடிக் கட்டடம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மருத்துவ விடுதிகளை உள்ளடக்கிய புதிய மாடிக் கட்டடத்திற்கு லிப்ற் பொருத்தும் பணிகள் நிறைவுபெற்றதும், இக்கட்டடத்தின் மேல்தளத்தில் சிறுவர் சிகிச்சைப் பிரிவினை இடம்மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகிறது.

புதிய கட்டடம் அமைப்பது குறித்த பேச்சுக்கள் சீன அரசாங்கத்துடன் இடம்பெற்று வருவதுடன், ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் 4 மாடிக் கட்டடம் எதிர்வரும் டிசம்பர் மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

### கொலையாளியின் ஆயுதம் மாயமாய் மறைந்தது

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனை கொலை செய்ய 2008 ஆம் ஆண்டு பயன்படுத்திய துப்பாக்கி காணாமற் போயுள்ளதாக கொழும்பு குற்றப் பிரிவு நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

ஜனவரி 1, 2008 இல் கொச்சிக்கடை சிவன் கோயிலில் குடும்பத்தினருடன் வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் போது துப்பாக்கிதாரி ஒருவரினால் சுடப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

### அடிதடியில் ஈடுபட்ட எட்டுப் பேர் கைது

இளைஞர் ஒருவரை துரத்தித் துரத்தி தாக்கிய குற்றத்திற்காக 8 பேரை யாழ். பொலிஸார் கைது செய்தனர். சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

நேற்று மாலை 3.00 மணியளவில் நல்லூர் பகுதியில் வீதியால் சென்ற பெண் ஒருவர் மீது குறித்த இளைஞர் சேஷ்டை விட்டுள்ளார். குறித்த இளைஞனை அப்பகுதியிலிருந்த உறவினர்கள் துரத்தித் துரத்தி தாக்கியுள்ளனர்.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பெண்ணின் உறவினர்களில் 8 பேரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

## சட்டக்கல்லூரி அனுமதி வயது இனி இல்லை

(கொழும்பு)

சட்டக் கல்லூரி அனுமதிக் கான வயதெல்லையை இந்த வருடம் முதல் அகற்ற தீர்மானித்துள்ளதாக சட்டக் கல்லூரி அதிபர் கலாநிதி டபிள்யு. டி. ரொட்ரிகோ தெரிவித்தார்.

35 வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரமே சட்டக் கல்லூரி அனுமதிக்காக விண்ணப்பிக்க முடியுமென இதுகால வரை கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த வருடம் முதல் 17 வயதுக்கு மேற்பட்ட தகுதியுள்ள அனைவரும் விண்ணப்பிக்க முடியும் என்று சட்டக் கல்லூரி அதிபர் கூறினார். சட்டக் கல்லூரி அனுமதிக்காக வருடாந்தம் 5 ஆயிரம் பேர் வரை விண்ணப்பிக்கின்றனர்.

உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியெய்திய மற்றும் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் தாய் மொழியில் சித்தி பெறுபேறு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்படுகிறது. கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவை இது தொடர்பான தீர்மானத்தை எடுத்துள்ளதோடு சட்டக் கற்கைகளுக்கான விழிப்புணர்வு மன்றம் அடங்கலான பல அமைப்புகள் இந்த முடிவை வரவேற்றுள்ளன.


SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

MyWay ஆசிரியரின் நேரடி வகுப்பில் கலந்து
இலகுவாக முழுமையாக ஆங்கிலம் கதைப்பதிலும்
இலக்கணத்திலும் தேர்ச்சிபெறுவதற்கான சந்தர்ப்பம்

சனி, ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் - 07.01.2012

ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் மட்டும்

| | |
|---|---|
| NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 8.00 - 9.00 | 182 ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 2.00 - 3.00 |
| நகரசபை அருகில் சாவகச்சேரி காலை 10.00 - 11.00 | இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை மாலை 4.00 - 5.00 |

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள்
O/L, A/L எழுதிய மாணவர், இளைஞர், யுவதிகள்

| | |
|---|---|
| NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 9.00 - 10.00 | 182 ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 3.00 - 4.00 |
| நகரசபை அருகில் சாவகச்சேரி காலை 11.00 - 12.00 | இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை மாலை 5.00 - 6.00 |

ஒவ்வொருவரின் ஆங்கில அறிவு மட்டத்திற்கேற்ப
பிரிவுகளில் வகுப்புக்கள் நடாத்தப்படுவதோடு திருப்தி
இல்லாதவர்களுக்கு முழுப்பணமும் திருப்பித்தரப்படும்

MyWay 077 33 63 456


## பணி நிலை வெற்றிடம்

தினமுரசு பத்திரிகையில் பின்வரும் வேலைகளுக்கான பணி நிலை வெற்றிடம் உண்டு.

1. அச்சு இயந்திரம் இயக்குபவர் (Sord, Kord) (பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2. பக்க வடிவமைப்பாளர்
3. கணினித் தட்டச்சாளர் (தமிழ்)

மேற்படி பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 10.02.2012 இற்கு முன்னதாக சுய விபரக்கோவையை ஆளணி முகாமையாளர் தினமுரசு, 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவிக்கு அல்லது thinamurasu@live.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.